

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 3ம் நாள் நிறைமதி (19-08-2024 திங்கட்கிழமை) வெளியீடு +94 21 222 9722



அருள்மிகு மனோன்மணி அம்மனுடனுறை

அருள்மிகு ஐம்பூதநாதப் பெருமான் துணையுடன்

**ஐந்தாம் ஆண்டில் கால் பதிக்கிறது தென்னாடு திங்கள் இதழ்**

உ

திருச்சிற்றம்பலம்

தமிழர்களாகிய நாம்
எங்கள் பிள்ளைகளுக்கு

## தூய தமிழில் பெயர் வைப்போம்

## பெயர் எங்கள் அடையாளம்

பிறந்த நட்சத்திரம் மற்றும்
பிறப்பு எண் அடிப்படையில்
பெயர் தெரிவு செய்ய

**www.peyar.org**

இது ஒரு தென்னாடு முன்னெடுப்பு ஆகும்



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம்.   www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




# ஐந்தாம் ஆண்டில் கால் பதிக்கும் தென்னாடு திங்கள் இதழ்

தென்னாடு திங்கள் இதழ், இம்முறை 48 ஆவது இதழாக உங்கள் கைகளில் திகழ்கிறது. ஒவ்வொரு நிறைமதிக்கும் வெளியிடப்படும் இந்த தெய்வத்தமிழ் இதழ் பிறமொழிக் கலப்பின்றி சைவம் மற்றும் தமிழ் மொழியின் பெருமைகளை எடுத்துரைக்கின்றது. குறிப்பாக இளம் சமுதாயத்தினரிடம் சைவத்தினையும், தமிழையும் கொண்டுபோய்ச் சேர்க்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகவும், தமிழர் பெருமைகளை தற்கால சந்ததியினர் அறிந்துகொள்ளவும், அவர்கள் சைவத்தமிழ் பண்பாட்டு விழுமியங்களை உள்வாங்கி, அதன்வழி வையத்துள் வாழ்வாங்கு வாழ்வது மட்டுமல்லாமல் அதனை அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்தவும் இந்த இதழ் துணை நிற்கும் என்பதில் ஐயமில்லை.

அத்துடன் புலம்பெயர் நாட்டில் வாழும் தமிழ் இளையோரின் நன்மை கருதி, சில பக்கங்களை ஆங்கிலத்திலும் (இதில் இருந்து எந்த மொழிக்கும் இலகுவாக மொழிபெயர்க்கலாம்) வெளியிடுகிறோம்.

இந்தப் பயணத்தில் தென்னாட்டிற்கு துணை நிற்கின்ற இதழ் ஆசிரியர்கள், படைப்பாளர்கள், வடிவமைப்பாளர்கள், அச்சுப் பதிப்பாளர்கள், மற்றும் வழங்கல் வழித் தொண்டர்கள் அனைவருக்கும் தென்னாடு சிவமடத்தின் சார்பில் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்துடன் கடந்த ஆண்டில் இருந்து தென்னாடு ஒசுத்திரேலியா பதிப்பிற்கு விளம்பர வழியாக நிதியுதவி செய்யும் தமிழ் ஆர்வலர்களான சிவத்திரு. சிதம்பரக்குமார், சிவத்திரு. சௌந்தர், சிவத்திரு. விஜயநேசன், சிவத்திரு. சுதர்மன் அவர்களுக்கும், இலங்கைப் பதிப்பிற்கு நிதியுதவியாக பெரியளவில் பங்களிப்பு செய்யும் சிவத்திரு. பிரகதீஸ்வரன் அவர்களுக்கும் அத்துடன் சிவத்திரு. ராஜ்குமார் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகள். எல்லாம் வல்ல அருள்மிகு மனோன்மணி அம்மனுடனுறை அருள்மிகு ஐம்பூத நாதப்பெருமான் அவர்களின் பெருங்கருணையினாலும், கொடையாளர்களின் பேருதவியினாலும் மற்றும் எமது தென்னாடு ஆசிரியர் நிலவன் அவர்களின் கடின உழைப்பாலும் தொடர்ந்து இந்த இதழை எங்களால் வெளியிடமுடிகிறது.

திருமுறைகள், சாத்திரங்கள், தத்துவங்கள், வரலாறுகள், செய்திகள், குருபூசைகள், தென்னாடு அறிக்கைகள் என்று பலவகையான கட்டுரைகளுடன் வெளிவந்த எங்கள் தென்னாடு இதழினை இம்முறையில் இருந்து ஒரு மலர் வடிவில் வெளியிட திருவருள் கைகூடியுள்ளதால், மலராக மாற்றியுள்ளோம். இது தென்னாடு இதழினை வாசித்துவிட்டுக் கைவிடாமல், நீண்டகாலத்திற்கு பேணிப் பாதுகாத்து வைக்க வழிசமைக்கும்.

தென்னாடு இதழ் ஊடாக மூன்று தலைமுறை படைப்பாளர்கள் மற்றும் இதழ் ஆசிரியர்களை உருவாக்கியுள்ளோம். இது தலைமுறை தாண்டிய சைவம் என்ற நோக்கத்தினை திருவருள் துணையுடன் நிச்சயம் நிறைவேற்றும் என்பதில் ஐயமில்லை. எந்தவித கட்டணமும் இன்றி 3000 இதழ்களை ஒவ்வொரு நிறைமதி தோறும் இலங்கை மற்றும் ஒசுத்திரேலியாவில் வழங்கி வருகின்றோம். அத்துடன் மின் இதழாக இரண்டாயிரத்திற்கும் மேலான தொடர்புகளுடன் பகிர்கிறோம். தென்னாடு இதழை வாசிப்பதால் நீங்கள் பயன் பெறும் அதே வேளை மற்றவர்களுடன் பகிர்ந்தும் உதவுங்கள். எங்கள் தென்னாட்டுப் பயணத்திற்கு உங்கள் அனைவரின் பேராதரவு என்றென்றும் தேவை.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**

**திருச்சிற்றம்பலம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



## தென்னாடு நிறைமதி அறிக்கை

(19-07-2024) – ஆடித்திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (20-07-2024) – மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 கடகம் நல்லோரை ஆடித் திங்கள் 4ம் நாள் சனிக்கிழமை அன்று நாற்பத்து ஏழாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது. இந்நிகழ்வில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் துணை முதல்வர் சிவத்திரு. குணரத்தினம் பிரதீபன் அவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவத்திரு. சிவக்கொழுந்து சிறிசற்குணராசா அவர்கள், வைத்தியர் சிவத்திரு. சி. சிவகோணேசன் அவர்கள், ஐபீசி தொலைக்காட்சியின் முதல்வர் சிவத்திரு. பாஸ்கரன் அவர்கள், ஆறுமுகநாவலரின் ஆறாவது தலைமுறை சேயோன் சிவத்திரு. மங்களேஸ்வரன் யதோட்சயன் அவர்கள் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

(02-08-2024) – ஆடித் திங்கள் தேய்பிறை கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (03-08-2024) – யாழ்ப்பாணம் இணுவில் அருள்மிகு ஞானாம்பிகை உடனுறை ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலின் சைவநெறிக்கூட அமைப்பினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த, முதுமுனைவர் செந்தமிழ் வேள்விச்சதுரர் மு. பெ. சத்தியவேல் முருகனார் ஐயா அவர்கள், அவர்களின் மகன் சிவத்திரு. திருச்சுடர் நம்பி அவர்களுடன், தென்னாடு அருள்மிகு மனோன்மணி அம்மனுடனுறை அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயிலிற்கு வருகை தந்து வழிபாடாற்றினார்கள்.

(04-08-2024) – ஆடி மறைமதி சிறப்பு வழிபாடுகளாக சிறப்புத் திருமஞ்சனம், பிதிர் வழிபாடுகள் என்பன இடம்பெற்றிருந்தன. (07-08-2024) – ஆடிபூர நன்னாளை முன்னிட்டு மனோன்மணியம்மைக்கு சிறப்பு அலங்காரத்துடன் வழிபாடுகள் இடம்பெற்றன. இவ்வழிபாட்டில் மங்கையர்கள் பலரும் கலந்து கொண்டு, திருவிளக்கு வழிபாடுகளை ஆற்றினார். (08-08-2024) – தமிழ்நாடு சிவத்திரு. சிவமுருகு இளவெனில் ஐயா அவர்களுடன் அடியார்கள் பலர், தென்னாடு ஐம்பூதநாதர் திருக்கோயிலிற்கு வருகை தந்து வழிபாடாற்றியிருந்தனர்.

(11-08-2024) – சுந்தர மூர்த்தி நாயனார் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (12-08-2024) – ஈழத்து சித்தர் பெருமக்களின் ஒருவரான சித்தானைக் குட்டி சுவாமிகளின் குருபூசை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (17-08-2024) – ஆவணித் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

திருச்சிற்றம்பலம்



# திருகோணமலையில் தமிழ் மற்றும் சைவப் பண்பாட்டுப் போட்டிகள்

பரடைஸ் பாலர் பாடசாலையின் 9வது ஆண்டு நிறைவை முன்னிட்டு திருக்கோணேச்சரத் திருக் கோயில் வரலாற்றுப் படிப்பினைகளை எமது இளைய தலைமுறைக்கு ஊடுகடத்தும் நோக்கில் **"திருக்கோணேச் சரத் திருக்கோயில் வரலாற்று வினாவிடைப் போட்டி"**, கடந்த 30-06-2024 அன்று காலை 9.00 மணியளவில் தி/கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் இடம்பெற்றிருந்தது.

இப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசு வழங்கல் நிகழ்வு, கடந்த 20-07-2024 சனிக் கிழமை தி/கி.ச.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி யின் ஆரம்பபிரிவு மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. நிகழ்வில் தென்கயிலை ஆதின குரு முதல்வரான தவத்திரு. அகத்தியர் அடிகளாரும், சிவபூமி அறக்கட்டளை தலை வரான செஞ்சொற்செல்வர் சிவத்திரு. ஆறு திருமுகன் ஐயா அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வரலாற்று ஆய்வாளரான சிவத்திரு.என்.கே.எஸ். திருச்செல்வம், சட்டதரனி சிவத்திரு. உமாகரன் இராசையா, மாவட்ட கலாச்சார உத்தியோகத்தரான திருமதி லக்சுமிதேவி சிறிதரன் ஆகியோரும் மற்றும் மாணவர்கள், பெற் றோர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர். மேலும் மாணவர் கலைநிகழ்வுகளும், பரிசில் வழங்கல் நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

**திருச்சிற்றம்பலம்**

# மாபெரும் திருக்குறள் போட்டிக்கான விண்ணப்பம் கோரல்

இந்து ஆன்மீகப் பிரசாரகர் சங்கம் மற்றும் உலக ஒழுக்கநெறிக் கழகம் இணைந்து மாணவர்களின் விழுமி யக் கல்வியை மேம்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கும் மாபெரும் திருக்குறள் போட்டிகளுக்கு அறநெறி மாணவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 8 மாவட்டங் களுடன் கண்டி, நுவரெலியா உட் பட 10 மாவட்டங்களிலுள்ள அற நெறி நிலையங்களிலிருந்து இதற்கு விண்ணப்பிக்க முடியும். இப்போட்டிகள் தரம் 01 தொடக் கம் உயர்தரம் வரையுள்ள மாண வர்களை உள்ளடக்கி 5 பிரிவுகளில் இடம்பெறவுள் ளது.

இப்போட்டிகளுக்குரிய ஒழுக்கம் சார்ந்த 151 திருக் குறள் அடங்கிய நூல் அறநெறி பாட சாலைகளுக்கு விநியோகிக்கப்பட் டுள்ளது. திருக்குறள்புத்தங்கள்தேவைப் படும் அறநெறி ஆசிரியர்கள் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். பதிவு கள் 31-08-2024 ஆம் தேதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப் பப்படிவங்களை புலனம் (வாட்சப்) மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.


**தொடர்புகளுக்கு**
**செல்வி. க. கனகதுர்க்கா**
**தலைவர் - இந்து ஆன்மீகப் பிரசாரகர் சங்கம்**
+94 (76) 532 3624

# சிவக்கவிமணி சி.கே சுப்பிரமணிய முதலியாரின் பெரியபுராண
# பேருரைச் சிறப்பு காணொளி வெளியீடு




நம்பியாரூரர் பெருமான் திருத்தொண்டத் தொகை பாடியருள, நம்பியாண்டார் நம்பிகள் திருத்தொண்டர் திருவந்தாதி பாடியருள, இவ்விரு அருள் வாக்குகளையும் கொண்டு தில்லை அம்பலவாணர் உலகெலாம் அடியெடுத்துக் கொடுக்க தெய்வச் சேக்கிழார் பெருமான் பாடியருளியது திருத்தொண்டர் புராணம்.

இந்நூல் தேவாரப் பதிகங்களின் விரிவுரை நூலாக, வாழ்வியல் நூலாக, வழிபாட்டு நூலாக, ஞான நூலாக, இலக்கிய நூலாக, சித்தாந்த நூலாக, வரலாற்று நூலாக பல்வேறு வகைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நூலுக்கு பேருரை கோவை சிவக்கவிமணி சி.கே சுப்பிரமணிய முதலியார் ஐயா அவர்கள் 12-07-1948 ஆனித் திருமஞ்சன நாளில் தில்லையில் அரங்கேற்றினார்கள்.

அதன் பிறகு திருவாரூரில் பேருரை புற்றிடங் கொண்ட ஈசரிடம் வைத்து வழிபாடு இயற்றிய பிறகு சிவக்கவிமணி சி.கே சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் ஆன்மார்த்த நாயகராகிய திருப்பேரூர் பட்டிப்பெருமானிடத்து வழிபாடு செய்து பேருரைகளை சிவக் களிற்றின் மீது வைத்து திருக்கோயில் மாடவீதி வலம் செய்து நடராச மூர்த்தியின் திருவடியில் வைத்து சான்றோர்கள் முன்னிலையில் வெளியிட்டார்கள்.

இதன் வைரவிழா கடந்த திருவள்ளுவர் ஆண்டு 2055 ஆனித் திங்கள் 28ஆம் நாள் (12.07.2024) வெள்ளிக் கிழமை அன்று ஆனித் திருமஞ்சன நாளில் திருப்பேரூர் குரு திருமண மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது. அந்த வகையில் சிவக்கவிமணி சி.கே சுப்பிரமணிய முதலியாரின் பெரியபுராணப் பேருரை வெளியீட்டின் 75ம் ஆண்டு வைரவிழாவை சிறப்பிக்க, ஐயாவின் அருட் பணியை போற்றி வாழ்த்தும் முகமாக அருளாளர்களான தமிழ்நாடு கோவை அரன்பணி அறக்கட்டளை தலைவர் சிவத்திரு. அ. பவானி தியாகராசன் ஐயா, பவானி சிவத்திரு. அ. வேலுச்சாமி ஐயா, சித்தாந்த சைவ சுடர்மணி சிவத்திரு. மீ. சிவசண்முகம் ஐயா ஆகியோர் திருவாய்மொழிந்து அருளிய காணொளிப் பதிவு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் படைப்பாக **'சைவத்தமிழறிஞர்களை ஆவணப்படுத்தல்'** என்ற தொகுப்பில் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் முதுபெரும் அறிஞர் ந. இரா. சென்னியப்பனார் ஐயாவின் வாழ்க்கை வரலாற்றினையும் ஒரு



தொகுப்பாக வெளியிட்டுள்ளோம். ஆகவே சைவத் தமிழ் பெருமக்கள் அனைவரையும் இக்காணொளிகளை பார்த்து, பகிர்ந்து பயன் பெறுமாறு அன்பாக வேண்டி நிற்கின்றோம்.

**தென்னாடு தொலைக்காட்சி இணைப்பு -**
https://www.youtube.com/thennadu

**திருச்சிற்றம்பலம்**

# முதுமுனைவர் மு. பெ. சத்தியவேல் முருகனார் ஐயா அவர்கள் தென்னாடு வருகை

யாழ்ப்பாணம் இணுவில் அருள்மிகு ஞானாம்பிகை உடனுறை ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலின் சைவ நெறிகூட அமைப்பினரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த, முதுமுனைவர் செந்தமிழ் வேள்விச் சதுரர் மு. பெ. சத்தியவேல் முருகனார் ஐயா அவர்கள் மற்றும் அவர்களின் மகன் சிவத்திரு. திருச்சுடர் நம்பி ஆகியோர், கடந்த **03-08-2024** சனிக்கிழமை அன்று தென்னாடு அருள்மிகு மனோன்மணி அம்மனுடனுறை அருள்மிகு ஐம்பூதநாதர் திருக்கோயிலிற்கு வருகை தந்து வழிபாடாற்றினார்கள்.

சத்தியவேல் முருகனார் ஐயா அவர்கள், ஐம்பூதநாதரின் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவில் கலந்து கொள்ள இருந்த வேளை, உலகெங்கும் பரவி இருந்த கொரோனா தீ நுண்மித் தாக்கத்தால் வர முடியாமல் போனது. ஐயாவின் முதன்மை மாணவரான சிவத்திரு. செல்லத்துரை பிரசாத் ஐயா அவர்களின் குழுவினரால் திருக்குட நன்னீராட்டு செய்து வைக்கப்பட்டது. அந்தவகையில் இறையருள் கூட்டுவித்ததனால் ஐயா அவர்களின் வருகை தற்போது இடம்பெற்றிருக்கின்றது.

**திருச்சிற்றம்பலம்**













# தமிழ்வேதமாகிய திருக்குறளில் தமிழர் தத்துவம் சைவசித்தாந்தம்



செந்நெறிச் செல்வர் அமரர் சிவத்திரு.கு.வைத்தியநாதன் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய முதல்வர்

## திருக்குறளை அணுகு முறை

### திருக்குறள் முதல் நூலா? வழி நூலா?

முதல் நூன் தன்மை யாது என்பதைத் தொல்காப்பியம், பொருளதிகாரம், நூன் மரபு என்னும் தலைப்பில் 96-ஆவது சூத்திரமாக,

**"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதல் நூல் ஆகும்"**

என்று தொல்காப்பியர் கூறுகிறார். இதன் பொருள் வருமாறு-

"நல்வினை தீவினை என்னும் இருவினைகளின் நின்றும் நீங்கி விளக்கம் பெற்ற அறிவினை உடைய சான்றோர் செய்த நூல் எதுவோ, அதுவே முதல் நூல் ஆகும்.

திருவள்ளுவர் எத்தகைய சான்றோர் என்பதை அவர் அருளிச் செய்த திருக்குறளே சான்று பகரும். ஆணவ மலப் பற்றும், மாயாமலப் பற்றும் நீங்கப் பெற்றமையால், அவற்றால் வரும் துன்பம் நீங்கப் பெற்று பிறப்பை அறுத்துப் பேரின்ப நிலை ஆகிய வீட்டினைப் பெற்றவர் திருவள்ளுவர். இதனை,

**இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி**
**மாசறு காட்சி யவர்க்கு** - குறள் 352

என்னும் குறள் தெளிவுறுத்தும். அகச்சான்றாக இருக்கும் இக் குறளில் வரும் இருள் ஆணவ மலத்தையும், மருள் மாயா மலத்தையும் மாசு பிறப்பையும் குறிக்கும். **"இருள் சேர் இருவினை"** என்றமையால், ஆணவ மலம் நீங்கப் பெற்றமையால், தன்முனைப் போடு கூடிச் செய்யும் நல்வினையும் தீவினையும் இல்லாது ஒழியலாயிற்று, திருவள்ளுவரின் அறிவு நிலையான பொருளான சிவத்தையே காண்பது என்பதை,

**மெய்ப்பொருள் காண்பது அறிவு** - 423

என்னும் அவர் வாய்மொழியாலேயே அறியலாம், இத்துணை நலன்கள் வாய்க்கப் பெற்ற திருவள்ளுவரே பெருஞ்சான்றோர் என்பதைச் **"சான்றாண்மை"** 99 என்னும் அதிகாரத்தில் வரும் குறட்பாக்களை நோக்கினால் எளிதில் எளிதில் புலனாகும். எனவே, திருவள்ளுவர் அருளிச் செய்த திருக்குறள், தொல்காப்பியர் கூறிய "முதனூல் இயல்பு"க்கு எல்லா வகையிலும் பொருந்து ஷவதாக உள்ளது. ஆகவே திருக்குறள் முதல் நூலே என்பது பெறப்படும்.

**"வழி நூல் இயல்பு"** என்னும் தலைப்பின்கீழ் 97 ஆவது சூத்திரத்தில்,

**"வழி எனப்படுவது**
**அதன் வழித்து ஆகும்"**

என்று தொல்காப்பியர் கூறியுள்ளார். இதன் பொருள் வருமாறு, வழிநூல் என்பது, முன் சூத்திரத்தில் சொன்னபடி சான்றோர் செய்த முதல் நூலின் வழியில் நின்று, அதனை ஒட்டிச் செய்யப் படுவதாகும்.

திருக்குறள் எந்த ஒரு நூலையும் பின்பற்றி அமையவில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. எனவே திருக்குறள் வழி நூல் அன்று என்பது பெறப்படும், திருமுறைகள் எவ்வாறு முதல் நூல் எனப்படுகின்றனவே, அவ்வாறே திருக்குறளும் முதல் நூலே என்பது எவராலும் மறுக்கப்பட முடியாத உண்மை ஆகும்.

மேலும் திருக்குறள் **"அகரமுதல"** எனத் தொடங்கி, **"முயங்கப் பெறின்"** என்று முடிகிறது. தமிழ் மொழியின் முதல் எழுத்து **"அ"** இல் தொடங்கி இருநூற்று நாற்பத்து ஏழாவது எழுத்தாகிய **"ன"** கர ஒற்றுடன் முடிவதாகத் திருக்குறள் அமைந்திருப்பதால் திருக்குறள் தமிழில் தோன்றிய முதல் நூல் என்பதும் பெறப்படும். வேறு எந்த நூலையும் தழுவியோ, பிறமொழி நூல்களின் மொழி பெயர்ப்பாகவோ திருக்குறள் அமையவில்லை.

சிவஞான போதத்தைத் தழுவிச் சிவஞான சித்தியார் சுபக்கம் அமைந்துள்ளதால், சிவஞானசித்தியாரை வழிநூல் என்கிறோம். இவ்விருநூல்களோடு புடை வைத்து எண்ணத்தக்க நூலாக இருப்பதால் சிவப்பிரகாசத்தைப் புடை நூல் அல்லது சார்பு நூல் என்கிறோம். திருக்குறள் அத்தகு சார்பு நூலும் அன்று. ஆகவே திருக்குறள் முதல் நூலே ஆகும்.

**தமிழ்வேதம் தொடரும்...**

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



**சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்**

**கௌமார மதம் என்றொரு மதம் உண்டா?**

**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

உபய அருணகிரிநாதர் என்று போற்றப்படும் குமரகுருதாச பாம்பன் சுவாமிகள், **"தெய்வநசை முன் தந்தான் தெய்வப்பிரதான சைவநசை பின் தந்தான் சாற்று எனக்குச் - சைவமுடிவாகிய சித்தாந்த நசை தந்தான்"** என்று அருள்வதுதான் அருள்வழக்கு. கௌமாரமதம் என்பது இட்டுக்கட்டடப்பட்ட பொய்வழக்கு.

சைவவாதி என்று பௌத்த இலக்கியமான மணி மேகலையிற்கூட சைவசமயப்பெயர் பயன்பாட்டில் விளங்கியுண்டு. கௌமாரன் என்றால் இளைஞன் என்றும் முருகன் என்றும் வடமொழியிற் பொருள் வழக்கில் உள்ளதேயொழிய, கௌமாரமதம் என்னுஞ் சொற்பதம் பிற்காலத்தில் இட்டுக்கட்டப் படும்வரை எந்தவொரு நூல்களிலும் இடம்பெறக் கூடவில்லை. இதனாலேயே, பிற்காலத்தில் தமிழ் நாட்டில் தோன்றிய கௌமார மடாலயம் என்பனவெல் லாம் சைவசித்தாந்தக் கொள்கையை விளக்கி யெழுந்த முருகவழிபாட்டினை உடைய துறவு மடங்களேயொழிய, சைவசித்தாந்தத்திற்கு முரணாகப் பிறிதொரு மதமாக விளங்குவனவன்று. அதாவது கௌமார மடலாயம் என்பது தமிழில் முருக மடாலயம் என்றேபொருளாகும்.

அதனது கொள்கை சைவசமயமேயொழிய கௌமார மதம் அன்று. ஏனெனில் முருகவழி பாடென்பது சிவ வழிபாடாகவே தமிழர் வாழ்வியலில் தொன்று தொட்டு விளங்கிவருகின்றது. **"ஆதலின் நமது சக்தி ஆறுமுகன் ஆவனும் யாமும் பேதகம் அன்றால்"** என் றும், **"ஈசனே அவன் ஆடலால் மதலை ஆயினன் காண்"** என்றும், **"அந்திக்கு நிகர் மெய்யண்ணல் அருள்புரிந்து அறிஞராயோர் சிந்திக்குந் தனது தொல்லை திருமுகம் ஆறுங் கொண்டான்"**என்றும், இன்னும் பிறவாறும் சிவபெருமான் தமது ஐந்துமுகத்தோடு கீழ்நோக்கியுள்ள அதோமுகமும் வெளித்தோன்ற எடுத்த திரு வடிவமே முருகப்பெருமான் என்பதுதான் கந்தபுராண முடிவாகவுள்ளது.

கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபரர் பெருமானும் "முக்கண் பரஞ்சோதி ஆங்கொருநாள் வெந்தகு வர்க்கு ஆற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி ஐந்து முகத் தோடு அதோமுகமும் தந்து திருமுகங்கள் ஆறாகி" என்றே, இக்கந்தபுராண வழக்கத்தைத் தழுவி அருளிச் செய்கின்றார். **"சிவசுத சிவய நமவென குரவ னருள்குரு... மணியே"** என்றும், **"சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற சோகமது தந்து...... எனையாள்வாய்"** என்றும், அருணகிரிநாதப்பெருமான் அருள்வதே தமிழ் வழக்கும் அருள்வழக்குமாகும்.

**ஆதிசங்கரர் சண்மதம் நிறுவினார் என்பது உண்மைக் கதையா? சைவசமயத் திருமுறை சாத்திரங்கள் கூறும் அறுசமயம் எவை?**

ஆதிசங்கரர் என்பவர் சைவசம யத்தவர் அன்று. அவர் மதத்தினர் தாம் அணியும் திருநீறு சிவசம்பந் தம் அற்றதென்று தெளிவாகவே தமது தெய்வத்தின் குரல் நூலில் கூறியுள்ளனர். ஆதிசங்கரர் நிறுவிய மதம் ஏகான்மவாதமதம் என்றும் மாயாவாதமதம் என்றும் சுமார்த்த மதம் என்றும் வழங்கப்படுகின் றது. இம்மதமே சங்கரவேதாந்தமதம் என்றும் இக் காலத்தில் அறியப்படுகின்றது. இம்மதக் கொள்கை பிரம்மம் ஒன்றேயுள்ளதென்றும் அதுவே அரி, அரண், அயன் என்று சகுணவடிவில் நிற்கின்றதென்றும், உயிர்களாகவு உலகாகவும் தோன்றுவது பிரம்மமே என்றும், இவ்வாறு பிரம்மமேசகுணப்பிரம்ம மாயும் உலகு உயிராயும் தோன்றுவது மாயையால் என்றும் கூறும். மாயையால் பிரம்மம் உலகு உயிரா கத் தோன்றுமென்றால், பிரம்மத்தை உலகு உயிராக உழலச்செய்துள்ள மாயை பெரிதா? மாயையால் பாதிப் படையும் பிரம்மம் பெரிதா? என்னும் கேள்வி ஒன்றினா லேயே, இம்மதக் கொள்கையை சைவசமயம் நிராக ரித்துவிடும்.

**"மிண்டிய மாயாவாதம் எனும் சண்டமாருதம் சுழித்து அடித்தார்ப்ப"** என்று இம்மதத்தை மாணிக்க வாசகப்பெருமான் கண்டித்தருள்வது சைவசமயத்தார் சிந்தித்து உய்வதற்கு உரியதாகும். இம்மதத்தார் ஆங்கி லேய ஆட்சியில் தாமே அனைத்து இந்திய சமயங்க ளுக்கும் தலைமைச் சமயத்தார் என்று நிலைநாட்டி ஆங்கிலேயரிடம் இந்தியச் சமயங்கள் குறித்த பரிபாலன உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உருவாக் கிய இட்டுக்கட்டுக்கதையே, ஆதிசங்கரர் சண் மதம் உருவாக்கினார் என்னும் கதையாகும்.

அதாவது, சுமார்த்தமதத் தலைவரால் உரு வாக்கப்பட்ட சமயங்களே இந்திய சமயங்கள் யாவும் என்று நிறுவி, தம்மை இந்திய மதங்களின் பொதுத்தலை வராகப் பிரகடனஞ் செய்துகொள்வதற்கு ஆதி சங்கர மதபீடங்களான சங்கராசாரியப்பீடங்கள் உருவாக் கின கதையே இக்கதையகும். அதாவது, இசுலாம், கிருத் தவம், யூதம் முதலியவற்றை ஆபிரகாமியமதம் என்று பொதுவில் கூறுவர். இதுகொண்டு, முகமதுநபியே கிருத்தவம் யூதம் என்பவற்றை வகுத்தார் என்றால், உலகம் சிரிக்கும். ஆனால், இதுபோன்றதொரு போலிக்கதையை மாணிக்க வாசகப்பெருமானால் கண்டிக்கப்பட்ட மாயாவாத ஏகான்மவாத சுமார்த்த மதத்தினர் உருவாக்கிச் சைவசமயத்தினரிடையேயே பரப்பியும் உள்ளனர் என்பது நம்மவர் வெட்கித் தலை குனிய வேண்டிய ஒன்றேயாகும்.

**(தொடரும்...)**

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 2000 ஆண்டுகள் பழமையான வரலாற்று தொடர்புடைய அம்பாறை ஆலங்குளம் சிவன்கோயில்




சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு




ஈழத்தைச் சிவபூமி என்று செப்புகின்றது திருமூலரின் திருமந்திரம். ஈழம் பௌத்தர்களின் பூமி என்று மகாவம்சம் மாய இருள்கொண்ட கற்பனைக் கதைகளை முலாம் பூசி சூளுரைக்கும் தற்போதையச் சூழலில், ஈழத்தின் அண்மைக்கால தொல்லியல் அடிப்படையிலான ஆய்வுகள் குறிப்பாக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்று வருகின்றன. இதன் பலனாக மறைந்த மறைக்கப்பட்ட பல சைவக்கிராமங்கள், அங்கு பண்டு தொட்டு நிலவி வந்திருந்த வழிபாட்டு இடங்கள், வழிபாட்டுப் பொருட்கள், மக்களின் பாவனைப் பொருட்கள், எழுத்துக்கள் பொறிப்புச் செய்யப்பட்ட பாறைகள், கருங்கற் தூண்டங்கள், மட்பாண்டங்கள் என்பன தொல்லியல் ஆய்வுகள் மூலமாக வெளிக்கொணரப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் அண்மைக்காலத்தில் தொல்லியல் ஆசிரியர்களின் கவனத்தை ஈர்த்த ஒரு திருக்கோயிலே அம்பாறை ஆலங்குளம் சிவன் கோயில். இந்தக் கோயில் அம்பாறை மாவட்டத்தில் தீகவாவி, குடுவில் ஆகிய குக் கிராமங்களை உள்ளடக்கிய ஆலங்குளம் என்ற இடத்தில் மரங்களும், பற்றைகளும் நிறைந்த இடத்தில் கோயிலின் பெரும்பாகங்களை ஆலமரம் விழுங்கிய நிலையில் அழிந்த நிலையில் சிதைந்த கட்டட உதிரிப் பாகங்களுடன் காட்சி தருகின்றது.

இக் கிராமங்களில் பண்டு தொட்டு தமிழர்களே வாழ்ந்து வந்துள்ளனர். இருப்பினும் தற்போது இங்கு ஒரு தமிழ்க் குடியிருப்பைக் காண முடியாமல் இருப்பது, தமிழர் வாழ்ந்து மறைந்த கிராமப்பட்டியலில் ஒன்றாக இணைத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. இருப்பினும் இவ் வட்டாரங்களில் தமிழர் வாழ்ந்து வந்தமைக்குரிய அடையாளங்களும், செவிவழிக்கதைகளும் வேறு இனத்தவர்களின் சொல்லாடலினால் அறியக் கூடியதாக உள்ளது.

குறிப்பாக குடுவில் வட்டாரமானது தீகவாபிக்கு அருகில் அமைந்துள்ள பிரதேசமாகும். இற்றைக்கு ஐந்து ஆண்டு மானங்களுக்கு முன்னரே அப்பிரதேசத்தில் கண்டு பிடிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டை ஆய்வு செய்த பேராசிரியர் பரணவிதான அக்கல்வெட்டை ஆதாரம் காட்டி, இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னபே இவ்விடத்தில் வாழ்ந்த “திஸ” என்ற தமிழ்ப் பெண்ணின் தலைமையில் தமிழ் வணிகன் ஒன்று சேர்ந்து வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்டதை உறுதிப்படுத்தியிருந்தார். இக்கல்வெட்டு 'Inseriptions of Ceylon' எனும் நூலில் 480 ஆவது கல்வெட்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதே போல் பேராசிரியர் இந்திரபாலா அவர்களும் இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர்கள் மொழியால் ஒரு இனக்குழுவாக வாழத்தொடங்கியதற்கு இந்தக் கல்வெட்டையும் ஆதாரமாகக் குறிப்பிடுகின்றார். இந்த நிலையில் ஆலங்குளத்தில் மட்டும் ஏன் தமிழ்குடியிருப்பு மறைந்து



போயின என்பது ஆதங்கமான ஐயப்பாடாக எழுகின்றது.

தற்போது ஆலங்குளத்தில் சைவத்தமிழர் வாழ்ந்த மைக்கான அடையாளமாக விளங்குவது இச் சிவன்கோயில் மட்டுமேயாகும். இச்சிவன்கோயில் பற்றி பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் அவர்கள் கீழ்வருமாறு கூறுகின்றார். **“இக் கோயிலின் புகைப்படங்களைக் கொண்டு இச்சிவன்கோயில் மிகப் பழமையானது என்பதை உறுதிப்படுத்த முடிகின்றது. அவற்றுள் கரு வறையில் மேற்பக்கச் சுவரில் குறுக்காக வைக்கப்பட்ட நான்கு கற்பலகைகள் மீது மேல் நோக்கி வட்டமாக இரு தளங்களில் கட்டப்பட்ட விமானத்தின் அமைப்பு, விமானம் அமைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட செங்கற்களின் அமைப்பும் என்பனவற்றின் வடிவமைப்பு, அவற்றின் நீள அகலங்கள் வாசற்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அகலமான கற்தூண்கள் என்பன கி.பி 11 ஆம்**



**நூற்றாண்டைச் சேர்ந்த பொலநறுவை, திருமங்களாய் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சோழர்கால கோயில்களை நினைவுபடுத்துவதாக உள்ளன.”**

பழங்காலத்தில் ஆலங்குளத்தில் சைவப்பற்றுடைய தமிழ்க் குடிகள் ஒரு சிவன்கோயில் கட்டி வழிபாடு இயற்றி வந்துள்ளனர். அச்சிவன்கோயில் திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி விமானம் போன்ற கருவறை அமைப்பினை மாதிரி வடிவமாகக் கொண்டு அமைக்கப்பட்டது போல் தெரிகின்றது. விமானத்தின் நான்கு மூலைகளிலும் நந்தியின் வடிவம் தெரிகின்றது. விமான தேவர் கோட்டங்களும் சிதைந்த நிலையில் உள்ளன. விமான வரிவடிவங்கள் பாண்டியர் காலத்தை நினைவூட்டும் வண்ணம் இருக்கின்றது. மண்டபத்தின் முகச்சுவரின் மேல் சிவலிங்கம் தெளிவான புடைப்புச் சிற்பாமாகத் தெரிய, அருகில் இரு உருவங்கள் சிதைந்த நிலையில் உள்ளன. திருக்கோயிலின் மண்டபத்தின் முன்னால் பலிபீடம், வாகனபீடம், கொடிமரக் கோட்டம் ஒரு மண்டபத்தில் அமைந்துள்ளன. அவற்றை இணைத்த மண்டப அத்திபாரம் மட்டுமே இப்பொழுது காணப்படுகின்றது.

கருவறையின் ஒருபகுதியை முழுமையாக விழுங்கிய தோற்றத்தில் பெரிய ஆலவிருட்சமும் உள்ளது. அதனுள் நாகபாம்புகள் அதிகம் உள்ளதால் கோயிலின் முழுப்பாகத்தையும் பார்வையிட முடியாமல் உள்ளது, இவற்றை எல்லாம் ஆதாரமாகக் கொண்டு இக்கோயிலை நோக்கும் போது. இது ஓர் பழமையான ஈசுவரம் என்பது புலனாகின்றது. இதற்குச் சான்றாக அமைவது திருக்கோயில் கட்டட உதிரிப்பாகங்களுமாகும். இக்கோயிலின் தோற்றத்தை உறுதியாக கூறக் கல்வெட்டுக்களோ, கருங்கல் திருமேனிகளோ இதுவரை கிடைக்க வில்லை. கருவறையின் உள் பகுதி செங்கற்களால் கட்டப்பட்டுள்ளது. சுவாமி பீடம் உள்ள இடம் அகழியாகக் காணப்படுகின்றது.

திருக்கோயிலின் அடிப்பாகத்தை நோக்கும் போது இக்கோயில் மிகப் பழமையானது என்பதை உறுதி செய்து கொள்ள முடிகின்றது. அடிப்பாகம் நீண்ட செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளது. விமானப் பகுதிகள் பிற்காலத்தில் சீமெந்து கொண்டு மீள் உருவாக்கம் செய்யப்பட்டதை ஊகிக்க முடிகின்றது. இவ்வாறு சீமெந்து கொண்டு மீள் உருவாக்கப் பணிபுரிந்தவர்கள் பற்றி வினாவும் போது, கோயில் சுற்றாடலில் வாழும் வேறு இனத்தவர்கள், கரும்புத் தோட்டங்களில் வேலை புரிவதற்காக வந்த தமிழர்களே இக்கோயிலை புதுப்பித்து வழிபட்டு வந்தார்கள், அவர்கள் சென்ற பின்பு அக்கோயில் அழிந்துவிட்டது என்று கூறினர்.

தற்போது இக்கோயிலை விநாயகருக்குரியது என்று அடையாளப்படுத்தி வருகின்றனர். பெரும்பாலும் கிழக்குக் கரையோரங்களில் குடிகொண்ட தொன்மைக் கால ஈசுவரங்கள் எல்லாம் காலப்போக்கில் ஆனை முகக்கடவுளின் அங்கம் பொருத்தி விநாயகர் கோயிலாக மடை மாற்றம் பெற்றுள்ளன. எடுத்துக் காட்டாக மட்டக்களப்பு மாமாங்கம், களுதாவளை, அம்பாறை தம்பிலுவில் ஆகிய இடங்களில் உள்ள இலிங்கப் பிள்ளையார் கோயில்கள் இதற்குத் தகுந்த சான்றாகும். அந்த வகையில் ஆலங்குளக் கோயிலையும் எடுத்துக் கொள்ளலாம்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இச்சிவன் கோயிலைப் பேணிப்பாதுகாப்பது சைவத்தமிழர்களின் தலையாயப்பணி ஆகும். ஏனெனில் பண்டைய காலத் தமிழர்களின் இருப்புநிலைக்கும் இங்கு வாழ்ந்த தமிழர்களின் சைவமரபுரிமைக்கும் சிறப்பு மிகுந்த சின்னமாக இக்கோயில் மிளிர்கின்றமையைக் கருத்தில் நிறுத்திச் செயற்பட முன்வர வேண்டும்.

**திகை அனைத்தும் சிவன் அவனாகில்**
**மிகை அனைத்தும் சொல்ல வேண்டா மனிதரே**
**புனை அனைத்தும் புறம் அங்கியில் கூடும்**
**முனை அனைத்தும் எங்கள் ஆதிப்பிரானே**

(திருமந்திரம் - 3010)

**திருச்சிற்றம்பலம்**

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவர் திருநாவுக்கரசர்




**"திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"**


**திருநாவுக்கரசர் சிவன்சேவடி சேர்தல்**

திருநாவுக்கரசர் இராமேச்சுரத்தில் பலநாள்கள் தங்கி இருந்து, சிவபெருமானின் திருவருளை ஏற்றவாறு விடைபெற்றுபின் திருநெல்வேலிக்கும், இறைவர் வீற்றி ருந்தருளும் திருக்கானப்பேர் முதலாக, அந்நாட்டில் உள்ள திருப்பதிகள் பலவற்றிற்கும் சென்று தொழுது வணங்கிக் கொண்டு, சோழமண்டலத்துக்குத் திரும்பி வந்து, திருப்புகலூரை அடைந்தார்.

திருப்புகலூரிலே தினமும் திருமுன்றிலிலே கைத் தொண்டுகள் பலவும் புரிந்தவாறு, பல்வேறு தமிழ் மாலைகளை அருளிச் செய்துள்ள குறிப்புகளை சேக் கிழார் பெருமானார் பதிவு செய்கின்றார். அடிகள் திருப்புகலூரில் பாடியருளிய திருப்பதிகங்கள் மொத்தம் 24, அவற்றுள் 5 புகலூர் தலத்திற்கானவை, மீதமுள்ளவை பொதுப் பனுவல்கள் என குறிப்பிடுகின்றார்.

திருப்புகலூரில் இருக்கு நாட்களிலே, எம்பெருமான் அப்பர் பெருமானுடைய நன்னிலைமையை உலகறியக் காட்டுவார் ஆக, அழகிய திருமுற்றத்தில் திருப்பணிக் காக உழவாரம் நுழைந்த இடம் எல்லாம் பொன்னி னோடு நவமணிகளும் வெளிப்பட்டு விளங்குமாறு அருள் செய்தார். நாயனாரம் அவைகளை பொருட்படுத் தாமல், அங்கே கிடக்கின்ற பருக்கைக் கற்களோடு சமமாக எண்ணி உழவாரத்தில் ஏந்திக் குளத்திலே விழ எறிந்துவிடுகிறார்.

பின்பு கடவுளுடைய திருவருளினால் அரம்பையர்கள் வான் உலகத்திலின்றும் வந்து இறங்கி, நாயனார் திரு



முன்னின்று இசைபாடியும், கூத்தாடியும் அவர் மேற் பூக்களைப் பொழிந்தும் அவரை தழுவுவார் போல் அருகில் வந்து சேர்பவர்களும், கூந்தல் அவிழவும் இடை துவளவும் ஓடுபவர்களும், மன்மதனுடன் மீள்பவர் களும், காம ஒளி பெருகக் காணும்படி நீண்ட உடை நழுவ நிற்பவர்களும் இவ்வாறு பல திறப்பட்ட செயல் களைச் செய்பவர்கள் ஆயினர்.

செய்தும், சிவபிரானுடைய திருவருளையே முன் னிட்டு ஒழுகுகின்ற வாகீசர் தம்முடைய சித்தநிலை சிறிதும் வேறுபடாதபடி, தாஞ்செய்யுந் திருப்பணி யிலே உறுதிகொண்டு, இருவினை முதலியவைகளை முன்னிலைப்படுத்தி **“நான் திருவாரூரில் வீற்றிருக்கின்ற சுவாமிக்கு ஆளானேன். உங்களாலே நான் ஆட்டுண் ணேன். நீங்கள் என்னை அலையன்மின்”** என்னுங் கருத்தால், **“பொய் மாயப்பெருங்கடலில்”** என்னுந் திருத்தாண்டகத்தைப் பாடியருளினார்.

அரம்பையர்கள் தங்கள் கருத்து முற்றாமை யால், அவரை வணங்கிவிட்டு சென்று விட்டனர். இந் நிலைமையை ஏழுலகமும் அறிந்து வழிபட நிலைபெற்ற அன்பு பொருந்திய பத்தியின் வடிவாக திருநாவுக்கர சர் திகழ்ந்தார்.

இறைவரின் திருவடியில் நிலைபெற்ற அறிவு இச்சை செயற்பாடுகளின் சேர்க்கையால், **“தம்மைப் புகலாக அடைந்த தமியேனான என்னைப் புகலூர் இறைவர் இனித் தமது சேவடியின் கீழ் இருக்கச் செய்வார்”** என்ற கருத்துடன் இம் மண்ணுலகம் முதலான எல்லா உலகங் களும் போற்றுமாறு நிலைபெறும் திருத்தாண்டக யாப்பிலமைந்ததும், **“புண்ணியா! உன் அடிக்கே போதுகின்றேன்!”** எனும் நிறைவு உடையதுமான பதிகத்தைப் பாடிச், சென்று அடைதற்கரிய சிவப் பேறாகும் மேலாய ஞானவடிவேயான சிவபெருமானின் சேவடிக்கீழ் திருநாவுக்கரசர் மிகு விருப்புடன் இருந்தருளி னார்.

இவ்வாறு திருநாவுக்கரசர் அமர்ந்திருந்த சித்திரைத் திங்கள் சதயத் திருநாளில், தேவர்கள் சொரிந்த மலர் மழையானது இவ்வுலகில் நிறைய விண்ணுலகில் எங்கும் ஐவகைத் துந்துபிகளின் ஒலிகளும் ஒலிக்கலாயின. நான்முகன் முதலாக அமைந்த எழுவகைப் பிறப்புள் தோன்றிய எல்லா உயிர்களும் தமக்குள் உயிர்க்கு உயிராய் நிறைவாகப் பெற்ற பெருமகிழ்ச்சி தழைய நின்றன.

**எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ**
**எம்பெருமான் திருவடியே எண்ணினல்லால்**
**கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்**
**கழலடியே கைதொழுது காணின் அல்லால்**
**ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்**
**ஒக்க அடைக்கும் போதுஉணர மாட்டேன்**
**புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்**
**பூம்புகலூர் மேவிய புண்ணியனே.**

- (திருப்புகலூர் திருப்பாடல் 01)

இத் திருநாவுக்கரச புராணத் தொடரில் கூறியபடி, அப்பர் பெருமான், ஆன்மாக்கள் புறச்சமயப் படு குழியில் வீழாது சைவநெறியே கருவூலம் என்று தெளிந்து, அதன்வழி நின்று சிவனை வழிபட்டு உய்யும் பொருட்டு, தமது செயல்களாலும், திருவாக்குகளாலும், மெஞ்ஞானம் பொருந்திய சமயகுரவராயினார் என்பது தெளிவாக விளங்குகின்றது.


ஆகையால், எம்பெருமான் திருவருளால் மனிதப் பிறவி எனும் பெரும்பேறாய் பெற்ற இப்பிறவியில், மெய்ப்பொருளை உணர்ந்து, மேன்மை பொருந் திய எம் நாயன்மார்கள் காட்டிய வழியில் திருநீறு, உருத்திராக்கம் ஆகிய சிவசின்னங்கள் அணிந்து, திருமுறைகளை ஓதி, சிவனை இடையறாது மேன்மேலும் பெருகி வளரும் மெய்யன்பினோடு மனம், மொழி, மெய்களினால் வணங்கி உய்வோமாக.

**திருச்சிற்றம்பலம்**

**திருநாவுக்கரச நாயனார் புராணம் முற்றும் (411 - 429)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# திருக்கோத்தும்பி எனும் தேன்மொழி



மாணிக்கவாசகர் எம் என்பும் உருக திருவாசகம் பாடியவர். சிந்தனை முழுதும் சிவனையே எண்ணித் தன் கண்ணீரால் எம்மையும் கரைத்தவர். தன்னைப் பெண்ணாகவும் இறைவனைத் தலைவனாகவும் கருதி, பிரிவு ஆற்றாமையை இன் தமிழில் திருவாசகமாய் இயம்பித்தந்த அருளாளர் அவர். எக்காரியம் செய்யினும் அதில் இறை சிந்தையே மேலோங்க வேண்டும் என்பது அவர் எண்ணம். அக்கால மகளிர் அதிகாலையில் எழுந்து மலர்ந்தும் மலராத போதாகிய பூக்களை பறித்து இறைவனுக்கு இட்டு வணங்குவர். அங்ஙனம் செய்யும் போது மலர்களில் தேனெடுக்கும் தும்பி இனத்தைச் சேர்ந்த வண்டுகளைக் கண்டு அவற்றை தலைவனாகிய சிவனிடத்தில் தலைவி தூது அனுப்புவதைப் போல மாணிக்கவாசகர் திருக்கோத்தும்பி எனும் தலைப்பினால் அமைந்த இருபது பாடல்களைப் பாடியருளி இருக்கின்றார். இங்கு தூது நேரடியாக இல்லாவிட்டாலும் கூட இறைவனின் பெருமைக் குணங்களைச் சுட்டிக் காட்டி, சிறு மலர்களில் ரீங்காரமிட்டு தேனெடுப்பதற்குப் பதில் இறைவன் திருத்தாள் தாமரைகளில் சென்று அடைக்கலமாகுங்கள் என மாணிக்கவாசகர் வண்டுகளை ஏவி நிற்கின்றார்.

இருபது பாடல்களும் இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொண்டு அருளிய விதத்தினையும், இறைவன் ஆட்கொள்வதற்குரிய தகுதி தன்னிடம் இருக்கின்றதா? இல்லையா? என்ற தவிப்பினையும், எங்ஙனமாயினும், பெருங்கருணையில் இறைவன் தன்பொருட்டு மானுட உருத்தாங்கி வந்து ஆட்கொண்ட திறத்தினையும், நினைந்து நினைந்து நெக்கு உள்ளம் உருகி வண்டினிடத்திலே அவற்றையெல்லாம் விதந்துரைத்து, அங்ஙனம் அருளிய பெருங்கருணைப் பேராளனிடத்திலே **"சென்று தாய் தும்பியே"** என மாணிக்கவாசகர் வண்டினங்களோடு பேசுகின்றார்.

வண்டினங்கள் மாணிக்கவாசகரின் மொழிகளைக் கேட்குமா? அவை தேனெடுக்கும் செயலை மட்டும் தானே செய்யும்? அவ்வாறிருக்க, உலகியல் பற்றுக்களோடு ஆறறிவு உள்ள மனிதர்களுக்கு சொல்வதைப் போல் ஏன் மணிவாசகர் வண்டினங்களுக்கு சொல்கின்றார்? எனில் காரணம் ஒன்று உண்டு. வண்டினங்கள் மட்டுமே தம் இறகால் விரைவாக காற்றை எழுப்பி பூவின் மகரந்தத்தை ஊதி தேன் எடுக்கும் ஆற்றல் பெற்றவை. அறியாமை இருள் அகன்று, மும்மலம் நீங்கினால் தான் பதிப் பொருள் பற்றிய ஞானமாகிய தேன் எமக்கு கிட்டும். எனவே வண்டுகளைப் போல ஞானத்தேனாகிய பதி யின்பம் பெறல் வேண்டின், புற இருள் போல் படர்ந்து கிடக்கும் ஆணவ மறைப்பை ஊதித் தள்ள வேண்டும் அல்லவா? அதற்காகவே வண்டினங்களுக்குச் சொல்வது போல் மனிதர்களுக்கு மறைபொருளாக மாணிக்க வாசகர் திருக்கோத்தும்பி பாடுகின்றார்!

பூ கொய்யும் போதும், இறைபணி செய்யும் போதும் தேவையற்ற சிந்தனைகளோடும் பேச்சுக்களொடும் காலத்தை அவமே போக்காமல், இத் திருவாசகப் பாடல்களைப் பாடியவண்ணம் இறைப்பணியைத் தொடர்வதே சாலப் பொருத்தமானது. பூவில் வண்டு தானாய் சேர்வதைப் போல இறைவன் திருத்தாள் களில் எம்மையும் சேர்ப்பிக்க மாணிக்கவாசகர் தன் அனுபவங்களை எம்மோடு பகிர்கின்றார். தேன் சுவை அறியாதவனுக்கு அதை வார்த்தைகளிலாவது அறிவிக்க அவர் முயல்கின்றார். இனியும் இந்த மானிட வண்டுகள் ஞானத்தேன் தேடுமோ ? வீணே தான் வாடுமோ?

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. சிவ செந்தமிழாதன்**
**இளம்புலவர் - தென்னாடு**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம், கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,**
**செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.**
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# தூய்மை பேணுவோம்!

நல்லூர் பெருந்திருவிழாக் காலம் இது. உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சைவத்தமிழ் மக்கள் நல்லூரை நோக்கி வருகின்றனர். நல்லூர் திருக்கோயில் சூழல் எங்கும் ஆன்மீக எழுச்சியை நாம் காண்கின்றோம். இது நல்லூருக்கு மட்டுமே தனித்துவமான எழுச்சி! அடியவர்களோடு அடியவர்களாக வெளிநாட்டவர் பலரும் வந்து முருக வழிபாடு செய்கின்றனர். வேண்டுதல் நிறைவேற்றுகின்றனர். எம் நாட்டைக்கடந்தும் நல்லூரின் புகழ் பரவியிருக்கின்றது என்பதற்கு இது சான்று. எனவே நல்லூர் ஈழத்து சைவ பாரம்பரியத்தின் முக்கியமான தொரு அடையாளம் எனக்கொள்ளலாம்.

இத்திருவிழாக்காலத்தில் நல்லூரை ஆதாரமாகக் கொண்டு பல குடும்பங்கள் தமது வியாபார நிலையங்களை நிறுவி வாழ்வாதாரமீட்டுகின்றனர். தற்காலிகக் கடைத் தொகுதிகள் அமைந்திருக்கும் அவ்விடங்கள் எப்போதும் சனக் கூட்டமாகவும் ஆரவாரமாகவும் இருக்கும். அதேவேளை வீதி-யெங்கும் பொலித்தீன் பைகளையும் துண்டுப்பிரசுரங்களையும் கச்சான் கோதுகளையும் பிளாத்திக் பொட்டலங்களையும் நாம் காணலாம். இவை கோயில் சூழலை மாசுபடுத்துவது மட்டு மன்றி கோயிலிற்கு இறையுணர்வோடு வரும் அடியவர்களையும் முகம்கோண வைக்கின்றது. கோயிலிற்கு ஆன்ம ஈடேற்றத் தின் பொருட்டு வருகின்ற நாம் கோயில் சூழலை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பேணுவதற்கு முன்னிற்கவேண்டும். இது எமது தொன்மையான வரலாற்று அடையாளம் என்பதையும், பிற நாட்டவர்கள் பார்வைக்கு எமது கோயில் சூழல் அசுத்த மாகத் தெரியக்கூடாது எனும் உள்ளுணர்வு எமக்கு இருத்தல் வேண்டும். கோயில் சூழலை சுத்தமாக்குவது மாநகரசபைக்கு மட்டுமே உரிய பணி என்று நாம் கருதக்கூடாது. எல்லோரும் சேர்ந்து ஒரே மனதாக எண்ணினால் தூய்மையான வீதியில் எல்லோரும் கோயிலிற்குப் பயணிக்கலாம்.

இவ்வாறே திருவிழாக்காலங்களில் கோயில் வீதிகளில் ஏற்படும் சன நெரிசல் பெண்களையும், குழந்தைகளையும், வயதானவர்களையும் வெகுவாகப் பாதிப்பதை நாம் வருடம் தோறும் காண்கிறோம். இடையிடையே சன நெரிசலில் சிக் குண்டு பாதிக்கப்பட்டு, அவசர மருத்துவ சேவை வண்டிகள் மூலம் வைத்தியசாலைக்கு சென்ற அடியவர்களும் உள்ள னர். இந்த நிலையையும் நாம் நினைத்தால் மாற்றி அமைக்க முடியும். கோயிலிற்கு உள் செல்லும் மற்றும் வெளிவரும் வீதிப்பக்கங்களை சரியான முறையில் பயன்படுத்தினாலே போதுமானது. இதற்கு காவல்துறையும் மாநகரசபையும் இணைந்து சிறந்த பொறிமுறை ஒன்றை உருவாக்குவதும் அவசியமாகிறது.

இக்காலத்தில் சுகாதாரக் கேடான உணவு மற்றும் குடிபான விற்பனைகளை நாம் விலகி நடப்பது சாலச்சிறந்தது. இறை வழிபாட்டின் பொருட்டு நல்லூர் செல்லும் நம் கவனத்தை திசைதிருப்பும் ஏராளம் விசைகள் திருவீதிகளில் வியாபாரக் கொட்டகைகளாக திறந்து கிடந்தாலும், எம் மனதை முருகனி டத்திலே மட்டும் ஐக்கியப்படுத்தி எம்மில் எத்தனை பேர் அங்கு சென்றுவருகின்றோம் என்பதை நாம் சுயபரிசோதனை செய்து பார்க்க வேண்டியது அவசியம்.

அலங்காரக் கந்தனிடம் நாம் செல்லும் போது எம் அலங்கா ரங்களை சற்றுக் குறைத்துக்கொள்வதில் தவறு இல்லை. தங்க ஆபரணங்களை அணிந்து வருவதைத் தவிர்த்து திருடர்க ளுக்கு விருந்தளிப்பதையும் தவிர்க்கலாம். தோய்த்து உலர்ந்த தூய பண்பாட்டு உடைகளை மட்டுமே அணிந்து உருத்திராக்க மாலை அணிந்து திருநீற்றின் ஒளி விளங்க எம் அடையாளப் பாதுகாவலர்களாய் நாம் நல்லூர் செல்ல வேண்டும். நல்லூ ருக்கு மட்டுமல்ல எந்தக் கோயிலிற்கு சென்றாலும் அங்ஙனமே செல்ல வேண்டும். பெரும்பான்மை சமுகத்தவர் வழிபாட்டுக்கு செல்லும் போது நேர்த்தியாய் செல்வதை நாம் பார்க்கின்றோம். அவர்கள் அவ்வாறு ஒரே ஆடையில் நேர்த்தியாய் வழிபாடு செய்வதாலே தான் தம் நிலையில் தளராதவர்களாய் உள்ளனர் என்பதை நாம் உணர வேண்டும்.

எனவே நல்லூர் கந்தனின் அருளும், எம் பண்பாட்டின் எழுச்சியும் ஒருசேர பெருகி வர இக்காலத்தில் நாம் எல்லோரும் தூயமனத்தோடு ஒழுகி நடந்து உயர்வு பெறுவோம்!

**திருச்சிற்றம்பலம்**




# செல்வச்சந்நிதியுறை அருள்மிகு சந்நிதியானும் சித்தர்களும்

**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

### செல்வச்சந்நிதி மடங்கள்

பூசகர்கள் வாய்கட்டிப் பூசை செய்கின்ற வழிபாட்டு நடைமுறைக்கும் சந்நிதியில் சித்தர் பரம்பரையொன்று தழைத்தோங்கியதற்கும் தொடர்பு கூறலாம். அதாவது சித்தர்கள் சில வழிபாட்டு நடைமுறைகளை எதிர்த்தவர்கள். இலக்கியத்தில் கூட சித்தர் பாடல்கள் எதிர்ப்புக் குரலாக ஒலிப்பதை நாம் அறிந்துள்ளோம். அவ்வகையில்

**"வெந்தநீறு மெய்க்கணிந்து வேடமும் தரிக்கிறீர்
சிந்தையுள் நினைந்துமே தினஞ் செபிக்கு மந்திரம்
முந்து மந்திரத்திலோ மூலமந் திரத்திலோ
எந்த மந்திரத்திலோ ஈசன் வந்தியங்குமோ?"**

என்ற சிவவாக்கியரின் சித்தர் பாடல் கூறுவது போல் சித்தர்களுக்கு சடங்கு கிரியை முதலானவற்றில் நம்பிக்கையில்லை. இதனாலே ஆகமமரபு சாராத வழிபாட்டு முறையில் வந்த செல்வச்சந்நிதியும் சித்தர்கள் பரம்பரையொன்று நீண்ட நெடிய மரபில் தழைத்தோங்குவதற்கு வாய்ப்பாக இருந்திருக்கவேண்டும். இதனை ஆற்றங்கரையான் நூலிலும் அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் எடுத்துரைத்துள்ளனர்.

இவ்வகையில் சந்நிதியுடன் தொடர்புடைய சித்தர்களில் சந்நிதிச் சூழலில் சமாதியடைந்தவர்களையும் அவர்கள் நினைவாக அமைக்கப்பட்ட கரும்பாவளி சித்தர்மேட்டில் அமைந்துள்ள சித்தர் சமாதிகளையும் இனங்காணும் முயற்சிகள் சிலவற்றை நோக்குவோம். (இது தொடர்பில் கலாநிதி சு. குணேஸ்வரன், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளர் கலாநிதி செ.சுதர்சன், தனு பதிப்பக நிறுவுநர் வே. பவதாரணன் ஆகியோர் இணைந்து சமாதிகளை இனங்காணும் முயற்சியிலும் அதனுடன் தொடர்புடைய மரபுரிமைச் சின்னங்களை வெளிப்படுத்தும் வகையிலும் களப்பயணம் மேற்கொண்டு எழுதப்பட்ட கட்டுரையை பதிவுகள் இணைய இதழில் வாசிக்கலாம்.)



கலாநிதி சு.குணேஸ்வரன்
ஆசிரியர் -
யா / சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை

1960, 70 களில் அடியார் மடத்தில் அன்னதானப் பணியை முன்னெடுத்தவரே வைரமுத்து சுவாமிகள். மடத்திற்குள் வேல் வைத்து வழிபட்டவர். அதற்கென வழிபாட்டு அறை ஒன்றைப் பேணியவர். வைரமுத்துச் சுவாமிகளின் சமாதி கோயிலின் தெற்குத் திசையில் அமைக்கப்பட்டுள்ளது. செட்டியவூர் தொண்டைமானாற்றில் வாழ்ந்து வரும் கறுப்பையபிள்ளை, வைரமுத்து சுவாமிகளின் சமாதியை கட்டுரையாளரின் நேரடிக் காட்சியின் போது அடையாளம் காட்டியுள்ளார். சுவாமிகளின் குருபூசைத் தினத்தில் பூசை செய்து படையல் படைத்து ஆதரித்து வருகின்றார். வைரமுத்து சுவாமிகளின் சமாதி கரும்பாவளியில் கிழக்குப்பக்கமிருந்து இரண்டாவது சமாதியாக அமைந்துள்ளது. (தகவல் : கறுப்பையா பிள்ளை, வயது 80, செட்டியவூர் தொண்டைமானாறு) இவரின் சமாதி சிறிய அறையாக அமைக்கப்பட்டு உள்ளே சிவலிங்க வடிவம் வைத்துக் கட்டப்பட்டுள்ளது.



சமாதிகளின் அருகில் மேற்கில்
தொண்டைமானாறு நீரேரி


“தினமும் மாலை நேரங்களிலும் மற்றும் ஓய்வாக இருக்கும் காலங்களிலும் தேவார திருவாசகங்கள் மற்றும் கந்தபுராணம் போன்றவற்றை ஆழமாகக் கற்றுணர்ந்து சைவசமய சீலராக வாழ்கின்ற செயற்பாட்டிலும் இவர் மிகுந்த அக்கறை காட்டியுள்ளார். ஒருபுறம் அடியார்கள் பசி போக்குகின்ற அன்னதானப் பணியை மேற்கொண்ட அதேநேரம் மறுபுறம் தன்னை ஞானநிலைக்கு பக்குவப்படுத்துகின்ற வகையிலும் இவரது அருள் வாழ்க்கை அமைந்திருந்துள்ளது. வைரமுத்து சுவாமிகளின் சமாதி கோயிலின் தெற்கு திசையில் அமைக்கப்பட்டுள்ளது.” என்பதனூடாக வைரமுத்து சுவாமிகளின் சமாதி கரும்பாவளி சித்தர் மேட்டில் அமைந்துள்ளமை உறுதியாகின்றது.

ஜேர்மன் சுவாமிகள் 1907 இல் ஜேர்மனியில் பிறந்தவர். இவரின் இயற்பெயர் பீற்றர் யேச்சிம் ஸ்கொன்பெல்ட் 1930 இல் (27 வயதில்) இந்தியாவுக்கு ஆன்மீகப் பயணம் செய்து பின்னர் இலங்கை வந்தவர். இலங்கை தென்பகுதியில் பௌத்த துறவிகளுடன் சேர்ந்து பௌத்தம் பற்றி அறிந்தார். பின்பு இந்தியா சென்றார். பின்னர் கதிர்காமத்தில் பல ஆண்டுகள் தவ வாழ்க்கை மேற்கொண்டார். யாழ்ப்பாணம் வந்து ஸ்ரீலங்கா புத்தகசாலையில் புத்தகங்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோது சிவயோக சுவாமிகள் அங்கு வந்து புத்தகத்தை இழுத்துப் பறித்து, “சும்மா இரு” என்று கூறினார். அன்றிலிருந்து அவரைக் குருவாகக் கொண்டு கதிர்காமத்திற்கு மட்டும் பல தடவைகள் சென்று வந்தார். சந்நிதியிலிருந்து கதிர்காமம் செல்லும் பாதயாத்திரைக்கு வித்திட்டவரும் இவரே. இவரின் தலைமையில் செல்வச்சந்நிதியில் இருந்து பல அடியார்கள் கதிர்காம யாத்திரை சென்றுள்ளனர். பல நூல்களைப் படித்து ‘சும்மா இரு’ என்ற தத்துவத்தைத் தேடியுள்ளார். செல்வச்சந்நிதி கோயில் சூழலில் அமைந்திருந்த ஆனந்தா ஆச்சிரமத்தின் ஆதரவு இருந்தது. ஆனந்தா ஆச்சிரமத்திற்கு அருகில் பன்னசாலை அமைத்து வாழ்ந்தார். “சும்மா இருக்கச் சூத்திரம்” என்ற தொகுப்பு நூலையும் வெளியிட்டார். தொண்டைமானாற்றிலேயே சமாதி அடைந்தார். இவரது உடல் அக்கினியில் எரியூட்டப்பட்டதாக அறியப்படுகிறது.

150 வருடங்களுக்கு முன்னர் தொண்டைமானாறு ‘சின்னப்பரியாரி’ என்று அழைக்கப்படும் புலவர் ஆண்டியப்பர் என்ற முருக அடியாரினால் பாடப்பட்ட எச்சரிக்கையும் பராக்கும் இன்றும் மரபு மாறாமல் பாடப்பட்டு வருகிறது. இதனூடாக பரியாரியார் மரபு ஒன்று இருந்திருக்கிறது எனவும் அவர்கள் புலமை மிக்கவர்களாகவும் முருகன் மீது பக்திகொண்ட அடியார்களாக இருந்துள்ளார்கள் என்பதும் தெரியவருகின்றது. இதனை அடியொட்டி கரும்பாவளி சமாதி மேட்டில் அடையாளம் காணக்கூடிய சமாதிகளில் ஒன்றாக பரியாரி ஆ. சுந்தரம் (சுந்தரப்பா) அவர்களது சமாதியைக் குறிப்பிடலாம். அவரின் பேரனாரான துரையர் சண்முகசுந்தரம் (வயது 60, சந்நிதி கிழக்கு, தொண்டைமானாறு) அவர்களுடனான நேரடியான உரையாடலினூடாக கட்டுரையாளரால் உறுதிப்படுத்தவும் அடையாளப்படுத்தவும் முடிந்தது.

ஆழ்வான் சுந்தரம் ஆயுர்வேத வைத்தியராகவும் கால்நடை வைத்தியராகவும் இருந்தவர். ஏட்டிலே எழுதிப் படித்தவர். ஞான சிந்தனை உடையவர். தனது வீட்டில் வேப்ப மரத்தின் கீழ் அம்மியும் குளவியும் வைத்து அம்மன் வழிபாட்டை மேற்கொண்டவர். உடுக்கு வாசிக்கக் கூடியவர். அண்ணாவியாராக அறியப்பட்டவர். நாடகங்கள் நடிப்பதிலும் மேடையேற்றுவதிலும் ஈடுபட்டவர். குடுமி வைத்த ஆன்மீகவாதிகள் அருளார்களுடன் தொடர்பு வைத்திருந்தவர். தனது இறப்புக்குப் பின்னர் தனது உடல் புழு பூச்சிகளுக்கும் இந்த மண்ணுக்கும் பயன்படவேண்டும் அதனால் தன்னை எரியூட்டக்கூடாது என்று விரும்பியவர். 18.08.1969 இல் வைரமுத்துச் சுவாமிகளின் சமாதி அருகே இவரது சமாதி அமைக்கப்பட்டுள்ளது. குறித்த சமாதியில் 1969 என்ற ஆண்டும் குறிக்கப்பட்டுள்ளது. (ஆதாரம்: செல்வச்சந்நிதி சித்தர் மடம் மறைந்தனவும் மறைக்கப்பட்டனவும், த. தயாபரன் ப33)

வீர சைவ மரபில் சமாதியடைந்தவர்களை எரிக்கும் வழக்கம் இல்லை. “சிவலிங்கப் பெருமானை புறத்தில் வைத்துப் பூசித்து மனம் நிறைவுறாது, அங்கத்தில் அணிந்த வீரசைவர் சிவனுக்கு ஒப்பாவர். வாழ்நாள் முழுவதும் சிவசின்னம் தாங்கிச் சிவனை மறவாச் சிந்தையுடன் வாழும் வீரசைவரின் ஆன்மா, சிவமெனவே கருதப்படுகிறது. அவ்வான்மா பிரிந்த உடல் சிவன் கோயிலுக்கு ஒப்பானது. சிவனை திருநிலைப்படுத்திய சிவன் கோயிலுக்கு யாரும் நெருப்பு வைப்பதில்லை. அவ்வாறே அகக்கோயிலில் சிவலிங்கத்தைப் பூசித்த ஒருவரின் உடலுக்கு தீ வைத்தல் கூடாது. ஐம்பெரும் பூதங்களினால் ஆகிய உடலை அவ் ஐம்பெரும் பூதங்களும் உள்ள பூமியிற் புதைத்தாலே பூதங்கள் ஐந்து அவ்வவ் கூறுகளுடன் சேரும் என்பது அறிவியல் துணிபு. சமய


சதுரபீடமும் சிவலிங்கவடிவமும் அமைந்த பரியாரியார் சுந்தரப்பாவின் சமாதி

நோக்கும் அறிவியல் நோக்கும் இசைவுற அமைந்ததே வீரசைவரின் சமாதி வைக்கும் முறையாகும்.” என்ற கூற்றும் கவனத்திற்குரியது.

ஜேம்ஸ் ராம்ஸ் பொதம் என்ற இயற்பெயர் கொண்ட ஆனைக்குட்டி சுவாமிகள் ஆனந்தா ஆச்சிரமத்தில் தங்கியிருந்தவர். இவர் சந்த சுவாமிகள் எனவும் அழைக்கப்பட்டவர். சோல்பரி பிரபுவின் மகன். யோகர் சுவாமிகளுடன் கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் தங்கியிருந்து அவரைக் குருவாகக் கொண்டிருந்தார். பின்னர் செங்கலடி சிவதொண்டனில் பன்னிரண்டு வருடம் பணி புரிந்தார். பின்னர் பிரித்தானியா திரும்பிச் சென்றார்.

வரி ஓவன் வின்சன் என்ற இயற்பெயருடைய நரிக்குட்டி சுவாமிகள் 1930 இல் ஒசுத்திரேலியாவில் பிறந்தவர். 1950 இல் இலங்கை வந்தவர். இவரும் ஆனந்தா ஆச்சிரமத்தின் அருகில் பன்னசாலை அமைத்துத் தங்கியிருந்தவர். 1994 இல் திருவண்ணாமலையில் சமாதி அடைந்தார்.

பன்றிக்குட்டி சுவாமிகள் தென்னிந்தியாவைச் சேர்ந்த தமிழர். ஆனந்தா ஆச்சிரமத்தில் தங்கியவர். இவரும் பன்னசாலை அமைத்து வாழ்ந்தவர்.

(தொடரும்...)

**திருச்சிற்றம்பலம்**

# சிவபுராணம்
## சிவனது அனாதி முறைமையான பழைமை
## (திருப்பெருந்துறையில் அருளியது)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன், அநேகன், இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தைஅடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே, நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன், புகழும்ஆறு ஒன்று அறியேன்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர, சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே! உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா, விமலா, விடைப்பாகா, வேதங்கள்
"ஐயா!" எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே,

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா,
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே,
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம், மனம், கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான், வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம், பாவம், என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா, உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலன்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயில் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயில் சிறந்த தயாவான தத்துவனே,
மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடரே,
தேசனே, தேனார் அமுதே, சிவபுரனே,
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே,
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே, அளவிலாப் பெம்மானே,
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே,
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே,
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே, யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே, துன்இருளே, தோன்றாப் பெருமையனே,
ஆதியனே, அந்தம் நடுவாகி அல்லானே,
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே,
கூர்த்த மெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணுணர்வே,
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே,
காக்கும் எம்காவலனே, காண்பரிய பேரொளியே,
ஆற்றின்ப வெள்ளமே, அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே, தேற்றத் தெளிவே, என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே, உடையானே,
வேற்று விகார விடக் குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே 'ஓ' என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து, வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே,
நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே,
தில்லையுள் கூத்தனே, தென்பாண்டி நாட்டானே,

அல்லல் பிறவி அறுப்பானே,ஹஓ" என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர், சிவபுரத்தின் உள்ளார், சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அழகம்மை உடனுறை சுந்தரேசுவரர் - திருக்கலிக்காமூர்

### தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 8ஆவது திருக்கோயில் திருக்கலிக்காமூர் (அன்னப்பன்பேட்டை)



"மடல்வரை யின்மது விம்முசோலை வயல்சூழ்ந் தழகாருங் கடல்வரை யோதங் கலந்துமுத்தஞ் சொரியுங் கலிக்காமூர்"

**"கலி"** (துன்பம்) நீக்கும் இறைவனான சிவபெருமான் வீற்றிருக்கும் அற்புதத் தலமே திருக்கலிக்காமூர் அழகம்மை உடனுறை சுந்தரேசுவரர் திருக்கோயில். இது தற்போது அன்னப்பன்பேட்டை என்று மக்கள் வழக்கில் வழங்கப்படுகிறது.

**அமைவிடம்: மயிலாடுதுறை, தமிழ்நாடு.**

*சீகாழி தொடர் வண்டி நிலையத்திற்குக் கிழக்கே 12. கி.மீ. தூரத்திலுள்ள தென்திருமுல்லை வாயிலுக்குத் தென்மேற்கே 5. கி.மீ. தூரத்தில் இருக்கிறது. திரு வெண்காட்டிலிருந்து பேருந்துகளில் செல்லலாம். இது காவிரி வடகரைத் தலங்களுள் 18 ஆவது ஆகும்.*

**இறைவர் திருப்பெயர்: சுந்தரேசுவரர், வில்வவனநாதர்**
**இறைவியார் திருப்பெயர்: சுந்தராம்பாள், அழகம்மை**
**கோயில் மரம்: வில்வம்**
**தீர்த்தம்: சந்திர தீர்த்தம்**
**வழிபட்டோர்: உமையம்மை, சம்பந்தர், சேக்கிழார், பராசர முனிவர் ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.**
**பாமாலை: சம்பந்தர், சேக்கிழார்**

**திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்**

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

**மடல்வரை யின்மது விம்முசோலை வயல்சூழ்ந் தழகாருங்**
**கடல்வரை யோதங் கலந்துமுத்தஞ் சொரியுங் கலிக்காமூர்**
**உடல்வரை யின்னுயிர் வாழ்க்கையாய வொருவன் கழலேத்த**
**இடர்தொட ராவினை யானசிந்தும் மிறைவன் னருளாமே.**

*(3-105)*

**சேக்கிழார் பதிகக் குறிப்பு**

**வைகுமந் நாளிற் கீழ்பால்**
**மயேந்திரப் பள்ளி வாசம்**
**செய்பொழில் குருகா வூரும்**
**திருமுல்லை வாயில் உள்ளிட்**
**டெய்திய பதிக ளெல்லாம்**
**இன்புற இறைஞ்சி ஏத்தித்**
**தையலாள் பாகர் தம்மைப்**
**பாடினார் தமிழ்ச்சொல் மாலை**

*(12-28-129)*

**திருத்தலச் சிறப்பு**

**"கலி"** (துன்பம்) நீக்கும் இறைவனான சிவபெருமான் வீற்றிருக்கும் ஊர் என்பதால் இவ்வூர், **"திருக்கலிக்காமூர்"** என்று அழைக்கப்படுகிறது. பராசர முனிவர் வழிபட்டதும், ஞானசம்பந்தரால் பாடல் பெற்றதும் ஆன அற்புதத் தலமாகும்.

இத்தலத்திலுள்ள சுந்தரேசுவரருக்கு வில்வ இலையால் அர்ச்சனை செய்து, அதையே மருந்தாக சாப்பிட்டால் தீராத நோய்கள் தீரும் என்பது நம்பிக்கையாக உள்ளது. இங்குள்ள ஒன்பான்கோள் (நவக்கிரக) மண்டபத்தில் அனைத்து கோள்களும் வாகனமின்றி நின்ற திருக்கோலத்தில் இருக்கின்றன. சற்று குட்டையான பாணத்துடன் கூடிய சிவலிங்கத் திருமேனிக்கு, வெள்ளி நாகாபரணம் அணிவித்திருப்பது பேரழகு. அழகம்மைக்கு போற்றி அர்ச்சனை விசேடம் பெறுகிறது. சுற்று வீதியில் வில்வவனநாதர் சன்னதியும் உள்ளது.

இத்தலத்து ஈசனை வழிபட்டால் **"வினை, நோய் நீங்கி, செல்வம் பெருகும்"** என்று திருஞானசம்பந்தர்




தனது பதிகத்தில் குறிப்பிட்டு பாடியுள்ளார். இங்குள்ள விநாயகர் மிகவும் விசேடமானவர். அரிதாக சில சிவன் கோயில்களில் ஒரே சன்னதியில் இரண்டு அல்லது மூன்று விநாயகர்கள் அருகருகில் சேர்ந்து இருப்பர். ஆனால், இங்கு விநாயகர் சன்னதிக்கு முன்புறம் வாயிற் காவலர்கள் போல இரண்டு விநாயகர் இருக்கின்றனர். இத்தகைய அமைப்பைக் காண்பது அரிது.

### திருத்தல வரலாறு

சத்தி என்னும் முனிவர் தீவிர சிவபத்தர். இவர் திரசந்தி என்பவளை மணந்து கொண்டார். திரசந்தி கருவுற்ற போது, சத்தி முனிவரை உதிரன் என்னும் அசுரன்



சுந்தரேசுவரர்



அழகம்மை

கொன்றுவிட்டான். திரசந்திக்கு ஒரு மகன் பிறந்தான். தாயின் மடியில் தவழ்ந்த குழந்தை தனது தாய், அமங்கலையாக (கணவனை இழந்த பெண்) இருந்ததைக் கண்டு வருந்தியது. பராசரர் என்று அழைக்கப்பெற்ற இக் குழந்தை, வேதத்தில் புலமை பெற்று மாமுனிவரானார். தன் தந்தையைக் கொன்ற அசுரன் உதிரனை அழிக்கப் பெரிய வேள்வி ஒன்றை நடத்தினார். இந்த வேள்வியின் பலனைக் கொண்டு உதிரனை அழித்தார்.

அசுரனாக இருந்தாலும் உயிரைக் கொலை செய்ததால் இவருக்கு தோசம் உண்டானது. தோசம் நீங்க அவர் பல தலங்களுக்கு திருத்தலப்பயணம் மேற்கொண்டார். அவ்வாறு இத்தலத்தை வந்தடைந்த போது சிவ பெருமான் அருட்காட்சி வழங்கி அருள் புரிந்தார். பராசர மாமுனிவருக்கு அழகு பொருந்தியவராக காட்சி தந்ததால் இவர், **“சுந்தரேசுவரர்”** என்று பெயர் பெற்றார். வில்வவனத்தின் மத்தியில் எழுந்தருளியவர் என்பதால் இவருக்கு **“வில்வவன நாதர்”** என்றும் பெயருண்டு.

### திருக்கோயில் அமைப்பு

இக்கோயிலில் உள்ள சிவபெருமான் தான்தோன்றி மூர்த்தியாக இருக்கிறார். கிழக்கு நோக்கிய இந்தக் கோயிலுக்கு முக்கிய இராசகோபுரம் இல்லை ஆனால் நுழைவாயிலில் அழகான வளைவு உள்ளது. இங்கு கொடிமரம் இல்லை. கோயிலுக்கு எதிரில் குளம் உள்ளது. படிகளின்றிச் சீர்குலைந்து குட்டை போல் உள்ளது. முகப்பு வாயிலைக் கடந்து உள் சென்றால் வீதியில் விநாயகர், சுப்பிரமணியர், வில்வநாதர், அகிலாண்டேசுவரி, திருமகள் சந்நிதிகள் உள்ளன. அடுத்துள்ள இடத்தில் பைரவர், சனீசுவரன், விநாயகர், கைலாசநாதர், பராசரர், பத்திரகாளி முதலிய திருமுன்கள் வரிசையாக வைக்கப் பெற்றுள்ளன. வலம்முடித்து உட்சென்றால் நேரே மூலவர் அருட்காட்சி. மூலவரை வணங்கி வலது புறம் சென்றால் அழகம்மை சந்நிதி உள்ளது.

இத்திருக்கோயிலில் பெருவிழா நடைபெறுவதில்லை. மாசிமகத்தன்று சுவாமி, தென் திருமுல்லை வாயிலுக்கு எழுந்தருளித் தீர்த்தம் கொடுக்கும் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. இத்திருவிழாவானது **“தீர்த்தவாரி”** என்று சிறப்பாக அழைக்கப்படும்.

திருச்சிற்றம்பலம்

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்



பவனி சிவ
அ.வேலுச்சாமி

### சிவக்கவிமணி ஐயா அருள் வரலாறு

ஐயாஅவர்களின்முன்னோர்கள்வாழ்ந்தநாடுசேக்கிழார் பெருமான் அவதரித்த தொண்டை நன்னாடு. **'தீய என்பன கனவிலும் நினைவிலார் சிந்தை தூய மாந் தர்வாழ் தொண்டை நாட்டியல்பு சொல்வரைத்தோ?'** என்று திருக்குறிப்புக் தொண்ட நாயனார் புராணத் தில் ஆசிரியர் பெருமான் போற்றுகின்றார். திருவாலங் காட்டு வேளாளர்கள் சத்தியங்காப்பதில் சிறந்தவர்கள். ஒரு காலத்தில் வணிகன் ஒருவனுக்குத் தாங்கள் சொல்



**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**

லிய வாக்கைக் காப்பாற்றும் பொருட்டு எழுபது பேரும் தீப்பாய்ந்து உயிர் கொடுத்த பழங்கதை திருஞானசம்பந்த நாயனார் தேவாரத்திலும், பெரிய புராணத்திலும் போற்றப்பட்டிருக்கிறது.

அங்கு வாழ்ந்த வேளாளர்களில் ஒரு குடி நம் முடைய கொங்கு நாட்டில் வந்து குடியேறியது. அவர்கள் குலத் தொழிலான உழவுத் தொழிலையே செய்து வந் தார்கள். அந்த மரபிலே தோன்றிய கந்தசாமி முதலியார் வடிவம்மை என்பவருக்குத் திருமகனாராகக் கோயம் புத்தூர் நகரத்தில் அவதரித்தவர் நம்முடைய ஆசி ரியர் சிவக்கவிமணி ஐயா அவர்கள். ஈசுவர வருடம் மாசி மாதம் 10ம் தேதி புதன் கிழமை அவதரித்தவர் ஐயா அவர்கள். அவருடைய தந்தையார் கந்தசாமி முதலி யார் அவர்கள் மாதவச் சிவ ஞான முனிவர், கச்சியப்ப முனிவர் குரு பரம்பரையில் வந்த மகாவித்துவான் சந்திரசேகரப் பிள்ளை என்பவருடைய மாணாக்கராக விளங்கியவர். சிவக்கவிமணி ஐயா அவர்கள் சிறுவயதிலேயே **"திருத்தொண்டத் தொகை"** பாராயணம் செய்யும் பழக்க முடையவராக விளங்கினார். ஐயா அவர்கள் பண்டிதர் ச. திருச்சிற்றம்பிள்ளை அவர்களி டத்தில் தமிழ் பயின்றுள்ளார். சென்னை இராசதானிக் கல்லூரியில் 1899 முதல் 1902 வரை மூன்று ஆண்டுகள் பயின்று இளங்கலைத் தமிழ்ப் பட்டம் பெற்றார். ஐயா அவர்கள் திருக்குறளிலும் பரிமேலழகர் உரையிலும் மிகுந்த ஈடுபாடும் புலமையும் கொண்டு விளங்கிய வர்.

ஐயா அவர்களுக்கு இரண்டு திருமணங்கள், முதல் மனைவி கங்கை வல்லி கனகசபாபதி முதலியார் மகள் மீனாட்சியம்மாள்அவர்நோய்வாய்ப்பட்டுஇறந்துவிடவே முதல் மனைவியின் உறவிலேயே மீனாட்சி என்று பெயருடைய இரண்டாவது மனைவியைத் திருமணம் முடித்தார். ஐயா அவர்கள் கோவையில் வழக்கறிஞ ராகப் பணியாற்றினார்.

### சிவக்கவிமணி ஐயாவும் பெரியபுராணமும்

ஐயா அவர்கள் இளம் வயது முதலாகப் பெரியபுரா ணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு 20-25 ஆண்டுகளாக நிறையக் குறிப்புக்களைச் சேர்த்து வைத்து வந்தார்கள். அவர்களிடையே ஆசிரியர் திரு.ச. திருச்சிற்றம் பிள்ளை அவர்கள் பெரியபுராணத்தில் உள்ள சுவையான நுட்பமான இடங்களை எடுத்துக்காட்டி அவருடைய ஆர்வத்தை மேலும் மேலும் வளர்த்து வந்தார்கள். தமி ழாசிரியர் சரவணம் பிள்ளை அவர்கள் கம்ப ராமாயணத் தில் குகப் படலத்தில் 'வந்தெதிரே தொழுதானை வணங்கினான்' என்ற பாடலுடைப் பொருளைச் சொல்லப் பல சுவையான இடங்களைக் கூற, சிவக்கவிமணி ஐயா அவர்கள் ஆசிரியரிடத்தில் வியந்து கூற அதற்குத் திருச் சிற்றம்பலம் பிள்ளை அவர்கள் 'பழிவிட நீ போ' என்ற இயற்பகை நாயனார் புராணத்தில் வரக்கூடிய இடத்தைச் சுட்டிக்காட்டி ஒரு பெண்ணால் 'ஊருக்கு வரும் பழி' 'குலத்திற்கு வரும் பழி' 'உன் குடும்பத்துக்கு வரும் பழி'

'உனக்கு வரும் பழி' என்று கூற, சிவக்கவிமணி ஐயா மிகவும் வியந்து பெரிய புராணத்தில் மீண்டும் ஆசை வளர்வதற்குக் காரணமாக இருந்தார்.

பின்பு 1918-ம் ஆண்டு சென்னைக் கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் B.A. அவர்கள் கோவையில் தங்கி நான்கு ஆண்டுகள் பாடம் சொல்ல அதற்குக் கையேடு வாசித்துவந்த பெருமை நம்முடைய ஐயா அவர்களுக்கே சாரும். அதற்குப் பிறகு திரு. மு. கதிரேசன் செட்டியார், திரு.மு. வேங்கடசாமி நாட்டார் போன்ற ஆராய்ச்சியா ளர்கள் பெரியபுராணத்தில் கூறும் நுண் பொருள்களை உடனிருந்து கேட்டிருக்கிறார். பிறகு ஐயா அவர்கள் பேருரை எழுதுவதற்குத் தொடங்கிச் சில பாகங்கள் 1934ம் ஆண்டில் அச்சிடத் தொடங்கி 1953 ம் ஆண் டில் அச்சிட்டு முடிக்கப் பெற்றது. இந்த ஞான நூ லின் வெளியீட்டு விழா, கோவை, C.S. இரத்தினசபா பதி முதலியார் அவர்களைத் தலைவராகவும் திரு. C.M. இராமச்சந்திர செட்டியார் திரு. M.S. பழனிப்ப முதலி யார் முதலியவர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட தொரு வரவேற்புக் குழு ஏற்படுத்தி உரிய வேலை களைச் செய்தது. 1954 ல் ஆண்டுச் சித்திரைத் திருவாதி ரையில் சிதம்பரத்தில் சுவடிகளை வைத்துப் பூசித்து யானையின் மீது ஏற்றி நகர்வலம் செய்வித்து இரண்டு நாட்கள் ஆயிரங்கால் மண்டபத்தில் மகாசபை கூட்டி அரங்கேற்றம் செய்யப்பட்டது.

ஐயா அவர்கள் நால்வர் பெருமக்களில் ஆளு டைய பிள்ளையார் பால் எல்லையற்ற பத்தி கொண்டு சம்பந்த சரணாலயத் தம்பிரான் சுவாமிகள் என்ற தீட்சா நாமத்துடன் துறவுக்கோலம் 1958 ல் அடைந்தார். பேரூர்ப் பட்டிப்பெருமான் மீதும் கூத்தப்பெருமான் மீதும் அளவற்ற பத்தி கொண்டு விளங்கினார். ஐயா அவர்களின் பெரு முயற்சியில்தான் கேரள மாநிலம் திருவஞ்சைக் களத்தில் சுந்தரமூர்த்தி நாயனார், சேரமான் பெருமான் நாயனார் குருபூசை இன்றளவும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகிறது. ஐயா அவர்களின் கடைசி நாட்களில் பெரும்பகுதியை படுக்கையில் அரு கில் மாட்டியிருந்த திருப்பேரூர் நடராசப் பெருமான-ின் படத்தை நோக்கிக் கைகளைச் சிரம்குவித்தே கழித் தார்கள். 24.01.1961 பகல் 2.30 மணிக்குத் தைத்திங்கள் பரணி நட்சத்திரத்தில் கூத்தப் பெருமானின் திருவடி நீழலை அடைந்து பேரின்ப முத்தியடைந்தார்கள். சிவக் கவிமணி ஐயாவுடைய திருவடித் தாமரை போற்றி வழிபட்டு உய்வோமாக.

**உரை நயம் பாடல் எண் 2**

**"ஊனடைந்த உடம்பின் பிறவியே**
**தானடைந்த உறுதியைச் சாருமால்**
**தேனடைந்த மலர்ப் பொழிற் றில்லையுள்**
**மாநடஞ்செய் வரதர் பொற்றாள் தொழ"**

தேன் சேர்ந்த மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த தில்லைப் பதியிலே பெரும் கூத்தைச் செய்கின்ற வரத னுடைய பொற்பாதங்களை வணங்க ஊன் பொருந்திய உடம்புடன் சேர்ந்த மானுடப்பிறவி எடுத்த உயிரே தான் பெற்ற உறுதிப் பொருளை அடையும். தாள் தொழப் பிறவி உறுதியைச் சாரும் என்று கூட்டி முடிவு செய்க.

ஊன் அடைந்த உடம்பின் பிறவி மற்றப் பிறவிக ளினின்றும் பிரித்து ஊனினால் ஆகிய விசேட உடம்பு பெற்ற மானிடரை உணர்த்திற்று.

சிறுபான்மை ஈ (ஈங்கோய்மலை) எறும்பு (எறும்பியூர்) கழுதை (கரவீரம்) முதலியவை பெருமானைப் பூசித் தது அவற்றின் புண்ணியக் கிரமத்திலே வழிபட்டதே யாகும். உடம்பின் பிறவி - உடம்பிற்குள் வந்த உயிர் எடுத்த பிறவி

**"மானுடப்பிறவி தானும் வகுத்தது மனவாக்குக் காயம்**
**ஆனிடத்து ஐந்துமாடும் அரன்பணிக்காக வன்றோ"**

(சித்தியார்)

இறைவனுடைய அடியைத் தொழுதலே மனிதர் பிறந்து அறிவு பெற்றதன் பயனாகும் என்பதனை

**"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்**
**நற்றாள் தொழாஅரெனின்"**

என்று திருவள்ளுவர் போற்றுகின்றார்.

அப்பர் சுவாமிகள் **"குனித்தபுருவமும்"** என்ற பாட லில் **"இனித்தம் உடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"** என்று அருளுகின்றார். ஊனடைந்த இப்பிறவி வெறுக்கத்தக்கதேயாயினும் இக்காரியம் செய்யுமாயின் விரும்பத்தக்கதாம்.

வாதவூரடிகள் **"ஆனந்தத் தேன்சொரியும் குனிப் புடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பி"** என்று பாடி யருளினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய அனுபவத்தைச் சேக்கிழார் பெருமான் கூறும் போது தில்லையில் **"தெண்ணிலா மலர்ந்த வேணியாய்"** என்ற பாடலில் **"மண்ணிலே வந்த இப்பிறவியே வாலிதாம் இன்பமாம்"** என்று கூறுகிறார். முன்பு கயிலையில் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராக இருந்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் கூத்தப்பெருமான் எடுத்த பாதத்தைக் கண்ட தன்னுடைய இன்ப அனுபவத்தை **"வாலிதாம் இன்பமாம்"** எல்லையில்லாத இன்பமாக அனுபவித்திருக்கிறார் என்று சேக்கிழார் பெருமான் போற்றுகின்றார்.

**"உலகெலாம்"** என்ற முதற்பாடலில் **"மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"** என்றார். அதன் பயன் யாது? என்பார்க்கு அந்த நடம்செய்யக்கூடிய பொற்றாளை வணங்கப் பிறவி எடுத்த உறுதி சாரும் என்று இப்பாட் டினால் விடை கூறி அருளுகின்றார்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**மற்றைய மெய்கண்ட சாத்திர நூல்கள் எவை?**

தர்க்க முறையில் அமைந்த சிறந்த நூல் சிவஞான சித்தியார். சிவஞான போதத்தின் விளக்கமாக அமைந்தது இது. பரபக்கம், சுபக்கம் என்னும் இரு பகுதிகளைக் கொண்டது இந்நூல். நூல் ஆசிரியர் காலத்துப் பிற தத்துவக் கருத்துக்களின் பொருந்தாமையை விளக்கி மறுத்துரைப்பது பரபக்கம். சைவ சித்தாந்த தத்துவத்தை விளக்குவது சுபக்கம். இதன் ஆசிரியர் சந்தான குரவரில் ஒருவராகிய சகலாகம பண்டிதர் எனப்படும் அருணந்தி சிவாசாரியார். இவர் எழுதிய இன்னொரு மெய்கண்ட நூல் இருபா இருபஃது.

உண்மை விளக்கம் என்ற நூல் திருவதிகை மனவாசங்கடந்தார் என்பவரால் எழுதப்பட்டது. இவர் மெய்கண்டாரின் ஒரு மாணாக்கராக விளங்கியவர். பதி, பசு, பாசம் பற்றியும், சித்தாந்தம் கூறும் முப்பத்தாறு தத்துவங்கள் பற்றியும் இந்நூல் கூறுகிறது. சிவனின் திருநடனம், திருவைந்தெழுத்து, முத்தி நிலை ஆகியவை பற்றிய விளக்கங்களையும் இதில் காணலாம். சைவ சித்தாந்த மாணவர்கள் முதலில் இதனைப் படிப்பது பயன் தரும்.

திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் என்பவர் எழுதிய நூல் திருவுந்தியார். திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் என்பவர் எழுதிய நூல் திருக்களிற்றுப் படியார். இந்நூல்கள் இரண்டும் சிவஞான போதத்திற்கு முன் வெளிவந்தவை.

சந்தான பரம்பரையில் இறுதியாக வந்த உமாபதி சிவாசாரியார் எட்டு நூல்களை எழுதியுள்ளார். இத்தொகுதி சித்தாந்த அட்டகம் எனப்படும். இவற்றில் ஒன்றான சிவப்பிரகாசம் சிவஞான சித்தியார் போல் சிறப்புமிக்கது. சிவஞானபோதம், சிவஞானசித்தியார் ஆகிய நூல்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பதுடன் புதிய நோக்கில் சித்தாந்தக் கருத்துக்களைத் தருவது இந்நூல். உமாபதி சிவத்தின் பிறநூல்கள், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சு விடு தூது, சங்கற்ப நிராகரணம், உண்மைநெறி விளக்கம் என்பவையாகும்.

**சைவ சித்தாந்தம் பற்றிய வேறு முக்கிய நூல்கள் சில கூறுக?**

மெய்கண்ட நூல்களுக்கு முன் வந்த ஒரு நூல் ஞானாமிர்தம். இதன் ஆசிரியர் வாகீசமுனிவர். மெய்கண்ட நூல்களுக்குப் பின்வந்த இரு நூல்கள் துகளறுபோதம், ஒழிவிலொடுக்கம் என்பவை. இவற்றின் ஆசிரியர்கள் முறையே சிற்றம்பல நாடிகள், காழிக் கண்ணுடைய வள்ளல் ஆவர். தத்துவப் பிரகாசம், சிவநெறிப் பிரகாசம், சைவ சமய நெறி, சிவதிருமோத்திரம், தத்துவரத்னாகரம் ஆகியவை வேறு சில நூல்கள்.

சைவத் திருமடங்களின் ஞானிகளால் எழுதப்பட்டவை பண்டார சாத்திரங்கள் என்ற பெயரில் உள்ளன. உமாபதி சிவமும் வேறு ஞானிகளும் வடமொழியில் எழுதிய நூல்களும் உள்ளன. ஈழத்து அறிஞர்கள் சிலரும் எழுதியுள்ளனர். இவர்களுள் குப்பிளான் காசிவாசி செந்திநாதையர், சைவப் பெரியார் சிவபாதசுந்தரம், அச்சுவேலி குமாரசுவாமிக் குருக்கள், ஏழாலை பண்டிதர் கந்தையா ஆகியோர் குறிப்பிடத் தக்கவர். சித்தாந்த நூல்களுக்குச் சிறந்த உரை எழுதியவரும் எழுதியவரும் உள்ளனர். இவரில் மு. திருவிளங்கம் குறிப்பிடத்தக்கவர்.

**திருச்சிற்றம்பலம்**

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை**
**(கலாநிதி க. கணேசலிங்கம்)**

# அமுதவிழா காணும் திருமதி. லோகநாயகி அருளலிங்கம் அம்மையார் அவர்கள் (தலைவர் – ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் – திருவாசகமடம், திருக்கேதீச்சரம்)



யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாக கொண்ட அம்மையார், நவரெத்தினம் புவனேஸ்வரி தம்பதியருக்கு, 10-08-1944 அன்று மூத்த மகளாக பிறந்தவராவார். அம்மையார் தனது ஆரம்பக் கல்வியை புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயத்திலும் தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும் கல்வி கற்றார். புங்குடுதீவு, வேலணை, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இடங்களில் வசித்து வந்த அம்மையார், 1964ம் ஆண்டு நாராயணபிள்ளை அருளலிங்கம் என்பவரை மணம் முடித்து, முத்தென ஐந்து பிள்ளைகளையும் பெற்றெடுத்தார்.

அம்மையார் ஆங்கில ஆசிரியராக 1974 இல் அரச சேவைப்பணியில் இணைந்து வவுனியா தாண்டிக்குளம் மற்றும் புங்குடுதீவு கணேச மகா வித்தியாலயத்தில் கற்பித்தார். பின்னர் 1977 - 1978 இல் பலாலி ஆசிரியர் கல்லூரியில் இரண்டு ஆண்டு பயிற்சி முடித்தார். அதன்பின் வேலணை மத்திய கல்லூரியில் 1984 வரை பணி புரிந்து அதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் 1994 வரை ஆங்கிலம் கற்பித்து ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

தற்போது இறைபணிக்காக தன்னை அர்ப்பணித்து, ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட திருக்கேதீச்சர திருவாசக மடத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று சிறப்பாக நடத்தி வருகின்றார். 1944 ஆம் ஆண்டு தவத்திரு. சரவணமுத்து சுவாமிகளால், இலங்கையில் சைவநெறிக்கு வலுவூட்டம் முகமாக சைவ ஆர்வலர்கள் பலரையும் இணைத்து ஆரம்பிக்கப்பட்ட ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தை, அம்மையார் அவர்கள் பொறுப்பேற்று திறம்பட நடத்தி வருவதோடு, திருக்கூட்டத்தின் 80ம் ஆண்டு அமுத விழாவாக, கடந்த மாணிக்கவாசகர் குருபூசை நன்னாளில் **“திருவாசகப் பெருவிழாவை”** நடத்தி இருந்தமை போற்றுதலுக்குரியதாகும்.

**திருமதி. லோகநாயகி அருளலிங்கம் அம்மையாரின் மனம் நெகிழ்ந்த பதிவுக் குறிப்பு**
**(2005ம் ஆண்டு திருவாசக மடத்தின் திறப்பு விழா மலரில் இருந்து)**

இத்திருமடமானது தவத்திரு. சரவணமுத்து சுவாமிகளின் ஆன்மீகத் தொண்டில் முதன்மையாக விளங்கிய ஒன்றாகும். இது அழிபுற்ற நாள் முதல் அவர்கள் மிகவும் மனவருத்தத்துடன் மீளக் கட்டியெழும்பும் நன்னாளை எதிர்பார்த்து, இறுதிவரை அதே நினைவோடும், கனவோடும் இருந்துள்ளார் என்பது அவரின் கைப்பட எழுதிய நாட்குறிப்பேட்டுடன் இருந்த அவரது ‘கனவு’ சான்றாகும்.

இத்திருவாசக மடத்தின் நோக்கம் சிவனடியார்களுக்கு விசேட தினங்களிலும், நித்தியமாகவும் தங்குவதற்கும், அன்னதானம் வழங்குவதற்கும் வழிபண்ணிக் கொடுத்தல், சமய சம்பந்தமான நிகழ்ச்சிகள் நடாத்தல், புலம்பெயர்ந்து வாழும் அன்பர்கள், அவர் தம் பிள்ளைகள் ஈழத்துப் பாடல் பெற்ற தலங்களை மறவாமல், அதன் பெருமைதனை உணர்ந்து தொடர்புகள் ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியனவாகும். இத்திருவாசக மடம் அதன் சேவையைப் பெரிய அளவில் பெருக்கி மக்களுக்கு உதவும் வகையில் செயற்பட, அனைவரும் சேவையில் இணைந்து கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

இத்திருவாசக மட மீளமைப்பில் எமக்கு உதவிய நல் உள்ளங்கள் அனைவருக்கும் நன்றிகள் கூறி அமைவதோடு, மேலும் மனம் சோரும் பேதெல்லாம் **“தூயவைதுணிந்தபோதுபழிவந்துதொடர்வதில்லை”** எனும் கம்பன் வாக்கை நினைவுபடுத்தி ஊக்கம் தந்து உதவிய என் மதிப்புக்குரிய ஆசான் நடராசா அவர்களுக்கும் என் மனம் நெகிழ்ந்த நன்றிகள் கூறி, அனைவரும் பேரானந்தப் பெருவாழ்வு வாழ, எல்லாம் வல்ல கௌரி





அம்மை உடனுறை திருக்கேதீச்சரநாதர் திருவருள் புரிய வேண்டி வணங்கி மகிழ்கிறேன்.

**“மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் -**
**அண்ணலார் அடியார் தமை அமுதுசெய்வித்தல்**
**கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்**
**உண்மையாமெனில் உலகர் முன் வருகென உரைப்பார்”**
- (பெரிய புராணம்)

**திருச்சிற்றம்பலம்**



தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Youth Workshop in Australia

In January 2025, there will be a youth Tamil and Saiva conference that we will hold to produce a new generation of leaders in both Sydney and Melbourne. This is designed to provide profound knowledge on the correlation between science, the natural world and Tamil enabling individu als to understand the well-documented achievements that have preserved the essence of Tamil culture over millennia. By this students will learn the traits required to become future leaders. This programme will be run by Dr. Sivakumar Ramakrishnan a university professor from Malaysia, who has a wealth of knowledge on Tamil and Saivam and its relationship with the natu ral world. He will go over key concepts such as self-leadership qualities, the Tamil language as an agamic science and Tamil scientific revelations.

Self-leadership is the foundation of personal empowerment. It involves taking control of one's life, setting clear goals, and consistently working towards them with determination and resilience. At the workshop, participants will be introduced to self-leadership as the ability to lead oneself through life's challenges with confidence and clarity. By cultivating self-leader ship qualities, individuals can navigate their personal and professional lives with a sense of purpose and direction. The workshop emphasises that self-leadership is not just about achieving success but about understanding one's strengths and weaknesses, making informed decisions, and taking responsibility for one's actions. By attending this workshop participants can further improve their success in life by adapting these valuable skills that they will be able to utilise in all aspects of life.

Dr Sivakamur will also discuss The Tamil language, the oldest language in the world, and how it holds a sacred place in the spiritual traditions of the Tamil people. More than just a medium of communication, Tamil is deeply intertwined with the principles and practices of Agamic traditions, particularly within the context of Saivm. Agamic texts, which guide temple rituals, philosophy, and spiritual practices, are written in Tamil, reflecting the language's sacred and scientific role in conveying spiritual knowledge. Moreover, Tamil's structure, sounds, and grammar are believed to resonate with the cosmic principles outlined in the Agamas.

Further, Dr Sivakumar will provide insight into the Tamil civilisation, the oldest in the world, and its remarkable contributions to various fields of science and technology. These advancements are not only noteworthy for their ingenuity but also for the way they seam lessly integrated with the cultural and religious practices of the time. From modern scientific developments to traditional practices like Sid-dha medicine and the architectural brilliance of Tamil temples, the legacy of the ancient Tamils continues to influence contemporary society.

All youth in Sydney or Melbourne should attend this workshop to boost their leadership qualities whilst gaining a deep understanding of the importance of Tamil and Saivam and its correlation with science. This will benefit not only yourself but the greater Tamil society.

# The charm of Nallur Festive Season





**Srisankarshan Srisatkunarajah**
**Next Generation Editor**
**2023 Batch,**
**Jaffna Hindu College**

Jaffna, the district that has some of the most extravagant, elaborate and lengthy temple festive calendars in the entire country, takes on a whole new face during the island's longest festival, of the largest temple as well. Nallur and the sophistication it regards itself with is never a strange concept to the young and the new. The halls and chambers being throng by devotees from the time that the temple opens its doors till the very last cry to evacuate the premises by the very assertive society of volunteers, Nallur really does cast a spell on this otherwise usual township, rendering it possible for multinational families to reunite and return back home, local economy to sore high, flights to be overbooked and streets to be filled with the latest additions to the expansive Tamil diaspora, all the way from toddlers in swaddles to fisty little ones in squeaky cartoon shoes. It is a time where the strength of unity takes display at its finest, with quite literally everyone being excited to attend the processions especially in the evenings. The halls are also occupied by curious and extremely respectful foreigners across the globe, trying their best to fit in with their makeshift bedsheet sarees and throw towel veshtes, the temple keeps everyone entertained all through out the 25 illustrious days so much so that no one notices the days flashing way.

With the sound minded clan of devout Anthanars leading the daily proce ssions along with the tem ple head, one could say that the ways of the festival and the temple itself are becoming more and more refined and more centralised around the Proceeding Idols themselves and the sanctum sanctorum rather than the other peripheries where people seem to concentrate usually, which is a favourable growth although sparking significant talk amongst the traditional ton. With the splendour of the arched courtyard surrounding the Theertham, there is always a brilliant view of the Deities and their mounts fast in procession. The corridors echoing with the Vedas, extracts from the Upanishads and the hymns of the bhajan groups, along with the Pancharathna krithis by the Mangala vadya troups, it is an other worldly display of bhakthi, and spiritual being. The outer procession, where the proceeding entity makes pitstops at chosen places for the recital of specific and soulful hymns by some of the most talented voices, are some surreal moments where quite literally everyone pauses and listens to the musical and literary prowess of the hymns in awe and contemplation. Groups of elderly discussing something seriously about their swift phased walks, circles of teens flying and piercing through the crowd deep in some conversation or excitement, gangs of mothers sticking together in utter silence yet communicating most eloquently with their eyes, preschoolers on a monologue of complaint about the itchiness of their attire and young parents spending their entire time regretting their way of commute with their newborn to the temple, friend groups of all ages sneaking away into the commercial streets for a head start in the eternal que for the 2 staple and notorious cream houses, people rushing into the premises while are busy rushing back to their vehicle parks, the Sabhas with their curation of speciality cultural programs, complaints of lost foot wear and stolen possessions, all of these add character to this festival.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE. He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Sivan is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

The Jains had decided they could not defeat Sampanthar by just vocal arguments, so they wanted to prove their supremacy by some demonstrations. They told Sampanthar that both parties should prove their faiths through the fire. Sampanthar accepted their challenge.

Sampanthar took a palm leaf on which the pathigam starting with the words "Pokamaarththa Puunnmulaiyaal" and it goes as follows:



Siva
P.Abiram
SG

**போகமார்த்த பூண்முலையாள்
தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள் ளேற்ற-
ண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன் கோவண
வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான் மேயது நள்ளாறே.**

**Pokamaarththa puunnmulaiyaal thannodum ponnakalam
Paakamaarththa paingkannvel letrannal parameddee
Aakamaarththa tholudaiyan kovana vaadaiyinmel
Naakamaarththa namperumaan meyathu nallare**



In English this translates to, nallaru in the beautiful chest the god in the most exalted place, the chief who has a white bull of greenish eyes and who has as a half a lady wearing ornaments, and giving immense pleasure, has a dress of a skin tied in the chest, is the place desired by our Lord who has tied a cobra on the dress of a loin-cloth.

Sampanthar put the leaf into the fire. The palm leaf remained unburned, in fact the leaf was still green, the pathigam was then named Pachaip pathigam

The Jains wrote their man thiram "Asthi Nasthi" on a palm leaf and put it into the fire. The palm leaf was burnt to ashes. The king then declared that the Jains had lost the challenge.

**To be continued...**

# The nectar that is Thirukothumpi





**Srisankarshan Srisatkunarajah**
**Next Generation Editor**
**2023 Batch,**
**Jaffna Hindu College**

Manikavasakar, a saint whose songs and outpourings are said to move the most stoic of hearts over the brink of tears through the shear intensity of devotion in his hymns. Through the stance he assumes as the sublime feminine, devotedly pining and ardently yearning towards the most supreme of aspirations, attaining the Godhead, he reminds humanity word by word, essence by essence and verse by verse of his life's work, The Thiruvasakam, bestowed upon us in the treasure trove that is Tamil: the necessity of realising and acknowledging the presence of divinity in the very fibre of existence, even while performing the most mundane of tasks.

Finding the anchor of his metaphorical brilliance in the daily routine of the devout and austere maiden of his time, he animates a scene where a young lass as devout as ever, is busy afoot gathering flowers graduating to- wards blossom, racing with the break of dawn itself. Which is when she notices that she is accompanied by a swarm of varieties of bees, bugs and flies all pursuing their goal of the day and life, nectar. Through the most articulate voice of this rather realised lass, Manikavasakar authors twenty nectareous versus, thus birthing Thiruko thumbi. Over the course of these dense hymns, the lass urges and requests the bees to relay her message, though not direct, to her lord, her solace, her goal, Sivaperuman. Vasakar as the lass does more than just urge, and also endears for the bees too to seek solace at the lotus feet of his most beloved lord, instead of spending their lives buzzing through the garden.

The entire composition explores intri cate concepts such as, occasions and ways in which the lord chooses to function to encompass his devotees; even after a blemish less life, the inherent moral crisis he goes through, his psyche's ethical debate as a form of cathartic expression in matters of self-doubt and disseverance, especially towards being a recipient of divine grace; Finding peace of mind and contemplating universal benevolence,

through the gestures that the lord plays out, especially when divinity assumed the form of flesh and blood just for the Saint himself. The verses do a great deal of emotional churning and clad the unfatho mable state of devotion from which the Saint sources his words, and each verse winding down with an open stimulus to the bees to direct his mellow message to the Godhead, serve as a coin phrase, serving as a metronome throughout the composition.

Whilst appreciating the technical and literary spectacle of the piece, one should also raise the question of why the saint goes on and on elaborating in length and great detail, the essence of his emotion and thoughts to, out of all organisms, the bees? That too in such a scholarly manner. Vasakar doesn't seem to bear even the slightest bit of concern about his words becoming such cliché, as the other half of that entire conversation were the bees, and to their nature they would continue to be absolutely oblivious to his words and keep on buzzing about and around the garden. In contemplation, one can draw a striking parallel between the saint's analogy of choice and the plight of human beings in pursuit of the ultimate goal of their lifetime, seeking and attaining Solace at the feet of the Godhead. Exactly how bees stay airborne, scan, skim, seek, arrive at, and extract the goal of their quest, the nectar from the complex enclosure of the flower, the saint compares the journey of realised human beings, in making their way through the foam and froth churned up by materialistic facades conjured up by their fellows and traversing through the most adhesive bounds of maya and realising where to turn In search of reality, knowledge and arriving at the Lotus feet of the Lord through determination, practice, devotion and realisation, thus attaining the state of 'Pathi', the ultimate solace. The metaphor urges and applauds with awe, the determination of the bees that yields nectar.

Through the dissolution of the blindfold that is Ignorance and unknowingness, and cleansing the common soul off the three eternal preliminary blunders, especially the hardest of them Arrogance, An Aathman could elevate itself to be worthy of the grace of the universal truth being bestowed upon it. To remind the millions Bhakthas that followed him on, till date and in future, Manikavasakar birthed this dense yet brisk composition, full of anecdotes from his own life and the dharmic ethos, to serve as a waking reminder to all who realise and care, towards persisting unto The Universal reality, The Lord himself via one's daily practice and actions.

The saint realises that the state of Muththi, at the lotus feet of the lord isn't actually an attainment or reaching a novel place, it is much rather a very long overdue homecoming, the most gratifying and befitting return for the Eternal Aathman. This, innate drive of ours, is as natural as the unwavering drive that the bees have towards the nectar, says the saint. Now it lies on us to realise and live up to these aspirations and make heist towards the return to the place of solace, or keep on rummaging around the garden just like the bees did and continue to do. The choice is clear, and causes being consi dered, one must wonder, what direction will humanity tread towards?

# Body and the World - Their Nature

**Last month Summary:**

Sivakan, a 7 year old kid, was talking with his friends when they asked him how they could work towards upgrading their limited knowledge so they can know the Lord Almighty? He replied This world is the school where we are sent by the Lord to gain knowledge and wisdom to know the Lord Almighty. He does this out of His infinite compassion for the souls.

Next day when we met we recalled the key points from the previous discussion. Out of infinite compassion for the souls, the body etc. was provided by the Lord so that they are freed of their bondage. Now we wanted to know the nature of the body and the nature of the objects in the world around us. The Lord Almighty is a conscious intelligent entity. We, the souls too, are conscious intelligent entities. We are endowed with discriminating ability. But is the body intelligent? Does it have a discriminating ability? No. The body, by itself, is inert and hence is not intelligent. It cannot have, discriminating ability either.

As long as we are alive - as long as the body is associated with the life principle, the body can function. You remember we talked about the kittens and other incidents. The kitten once dead did not and could not drink milk. The next door neighbour, the old lady once dead, can no more scold anyone. Since her body was of no more use it was burnt to ashes in the cremation ground.

Now let us talk about the natural sceneries we discussed. The yonder mountains, nearby rivers, lands and the clouds above are all inert. They do not have the life force in them. But when natural calamities like the earthquakes or floods or cyclones strike, they get destroyed. With earthquakes everything gets shaken up and crumbles down. With floods, everything gets washed away and things get blown away during cyclones. Thus



each and everything is subject to changes.

Who brings about all these changes in the worldly things, the matter? What is the effect of these changes? Do they perish at all? Science declares that matter does not perish to nothing, but changes to some other form of matter. In the case of the old lady's body, on burning it got converted to carbon-dioxide, smoke and ashes.Therefore all the worldly objects too are eternally existing entities. But they are subject to transformation. These transformations are called creation, maintenance and dissolution.Therefore all the inert, non-intelligent worldly objects are indeed ever existing entities".

They are created from their first cause (kaaranam) the material cause called as 'maayai' and ultimately resolve back unto maayai, the same cause from which they were created. This process of creation and dissolution happens by the divine will (aanai) of the Lord Almighty".

Saiva Philosophy Reference: All the worldly objects are eternally existing entities. But they are subject to transformation by the divine will of the Lord Almighty.

**Reference: Saiva Siddhantham – A Way of Life by Kovai Kizhar**

# தென்னாட்டு நிகழ்வுகள்




ஆடி மறைமதி சிறப்பு வழிபாடுகள் (04-08-2024)



ஆடித்திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் (19-07-2024)







தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த அடியார்கள் தென்னாட்டில் வழிபாடு (08-08-2024)





ஆடிப்பூர நன்னாள் சிறப்பு வழிபாடுகள் (07-08-2024)

# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆடித்திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (20-07-2024)



சுந்தரர் குருபூசை (11-08-2024)



சித்தானைக் குட்டி சுவாமிகள் குருபூசை (12-08-2024)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நாற்பத்து எட்டாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி நிறங்கள்” (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 3ம் நாள் நிறைமதி அன்று (19-08-2024 திங்கட்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும்இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org

fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org